# (ஐ) கைத்தொழில் அபிவிருத்தி

## முன்னுரை

பெருந்தொகையான உற்பத்தித் தொழில் நிலையங்களுக்கான உண்மை உற்பத்திப் புள்ளிவிபரங்களின் அடிப்படையில், 1960-1963ம் ஆண்டுகளுக் கிடையில் ஏற்பட்ட கைத்தொழில் வளர்ச்சியின் போக்கு—மகாவங்கியின் 1962ம் ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி—கைத்தொழில் முயற்சி களில் 1962ம் ஆண்டு ஏற்பட்ட தீட்சணமான எழுச்சியை உறுதிப்படுத்து கின்றது. தற்பொழுது கிடைக்கக்கூடிய தரவுகள் 1961 ஆண்டின் வளர்ச்சி வீதத்திலும் பார்க்க 1962ம் ஆண்டின் வளர்ச்சி வீதம் மும்மடங்கு அதிகரித் திருப்பதை வெளிப்படுத்துகின்றது. 1962ம் ஆண்டில், ஏற்பட்ட உயர்ந்த அதிக ரிப்பு வீதம் நிலைநாட்டப்படவில்லையெனினும், 1963ம் ஆண்டில், கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப் பெறுமானம் தொடர்ந்தும் விரிவடைந்தது. 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 16.9 சதவீத கைத்தொழில் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 1963ம் ஆண்டில் இது 11.3 சதவீதமாக விளங்கிற்று. கைத் தொழில் உற்பத்தியின் மொத்தப் பெறுமானத்தில் ஏற்பட்ட முழு அதி கரிப்புகளும் முறையே 1963ம் ஆண்டில் 440 இலட்சம் ரூபாய்களும், 1962ம் ஆண்டில் 563 இலட்சம் ரூபாய்களுமாகும். புதிய கைத்தொழில் முயற்சிகளில் ஏற்பட்ட வளர்ச்சி வீதங்களை மட்டும் ஒப்பிடும் பொருட்டு ''பல்வேறு உணவுத் தயாரிப்புகள்'' என்ற கைத்தொழிலை நீக்கினல் (இது பெருமளவில் எண்ணெய் குற்றலையும், தேங்காய்த் துருவல் தயாரிப்பையும் உள்ளடக்கியிருப்பதினல், அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள உற்பத்தியின் மொத்தங்களில் உயர்ந்த முக்கியத்துவத்தை வகிக்கின்றது) 1962ம், 1963ம் ஆண்டுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதங்கள் முறையே 30.0 சதவீதமாகவும், 18.4 சதவீதமாகவும் விளங்குகின்றன.

1961ம் ஆண்டுக்கும் 1963ம் ஆண்டுக்கும் இடையில் கைத்தொழிற் றுறையிலுள்ள வேலை நிலை மிகவும் குறிப்பிடத்தக்க அளவு விரிவடைந்தது. இக்கால எல்லைக்குள் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 6,300 பேர்களால் அல்லது 30 சதவீதமளவால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பில் மூன்றில் இரண்டு பங்களவு நான்கு கைத்தொழில்களில் ஏற்பட்ட விரிவின் பயனக எழுந்தது. இந்நான்கு கைத்தொழில்களாவன, ஆடைகள், பல்வேறு இரசாயனப் பொருட்கள், பல்வேறு உணவுப்பொருட்கள், விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த் தங்களும் ஆகியனவாகும். எனினும் வேலைநிலையில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பில் பெரும்பகுதி 1962ம் ஆண்டில் ஏற்பட்டது. இவ்வாண்டில் 3,900 பேர்கள் புதிதாக வேலையில் அமர்த்தப்பட்டனர். கைத்தொழில் ஊழியர்களின் எண்ணிக்கையில் 1962ம் ஆண்டு ஏற்பட்ட அதிகரிப்பு வீத மாகிய 19.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1963ம் ஆண்டில் இவ்வதிகரிப்பு 10.2 சதவீதமாக விளங்கியது.

வேலைக்கு வராமையினலோ அல்லது வேறு காரணங்களாலோ நிலை யற்ற வேலைகளைக் கொண்டுள்ள கைத்தொழில்களில் ஒவ்வொரு வருடத்திற்கு மான ஊழியர்களின் சராசரி எண்ணிக்கையிலும் பார்க்க வேலை செய்யப் பட்ட ஆள் வேலை நாட்களின் எண்ணிக்கையே வேலை நிலையின் உண்மை யான மட்டத்தை எடுத்துக்காட்டக்கூடிய சிறந்த அளவையாகும். எனினும் கைத்தொழில்களுக்கிடையில் ஆள் வேலைநாட்களின் விநியோகமும், வேலை செய்யப்பட்ட ஆள்வேலை நாட்களில் ஏற்பட்ட வருடாந்த அதிகரிப்பும், ஊழியர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட வேலையமைப்பி லிருந்து சிறிது வேறுபட்டதாகும். ஊழியர்களின் எண்ணிக்கையிலும், வேலை செய்யப்பட்ட ஆள்வேலை நாட்களிலும் ஏற்பட்ட அதிகரிப்புகள், கைத்தொழிற் துறையின் மொத்த கூலிச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு

களுடனும் இசைந்திருக்கின்றன. ஆயினும் கைத்தொழில்களுக்கிடையில், ஏற்பட்ட மொத்த கூலிச் செலவின் விநியோகத்துடன், மொத்த ஊழியர்களின் விநியோகத்தையும், வேலை செய்யப்பட்ட ஆள்வேலை நாட்களையும் ஒப்பிடும் பொழுது முக்கிய வேறுபாடுகள் புலப்படுகின்றன. அட்டவணை 1ல் காட்டப்பட்டுள்ளபடி இவ்வேறுபாடுகள் வெவ்வேறு கைத்தொழில்களுக்கிடையே ஒரு ஆள் வேலைநாளுக்கான கூலியில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளைப் பிரதிபலிக்கின்றன. எனவே ஆடைகள், ''விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களும்'' ஆகிய இரு கைத்தொழில்களிலே, ஏனைய கைத்தொழில்களிலும் பார்க்கக் குறைந்த கூலிவிகிதங்கள் நிலவியதன் காரணமாக மொத்தக் கூலிச்செலவில் இவ்விரண்டு கைத்தொழில்களினதும் பங்குகள், ஊழியர்களின் எண்ணிக்கையிலும், வேலை செய்யப்பட்ட மொத்த ஆள் வேலைநாட்களிலும் இவ்விரு கைத்தொழில்களின் பங்குகளிலும் பார்க்கக் குறைவுற்று விளங்கின. ஆடைகள் என்ற கைத்தொழிலில் தாழ்ந்த கூலிகளை உழைக்கும் பெண் ஊழியர்களே உயர்ந்த விகிதமாக விளங்குகின்றனர்.

**கைத்தொழில் உற்பத்தியின் பெறுமானத்திலும், அமைப்பிலும் ஏற்பட்ட மாற்றங்கள்**

பிரதான பொருளாதாரத் தொகுதிகளின்படியான கைத்தொழில் உற்பத்தியின் ஒரு பகுப்பு (அட்டவணை III ஐப் பார்க்கவும்), 1963ம் ஆண்டில் மொத்தப் பெறுமானத்தில் நுகர்ச்சிப் பொருட்கள் 63.7 சதவீதத்தையும், நடுத்தரமான பொருட்கள் 29.3 சதவீதத்தையும், முதலீட்டப்பொருட்கள் 7.0[1] சதவீதத்தையும் வகித்தனவென்பதைக் காட்டுகின்றது. 1960ம்-1963ம் ஆண்டுகளுக்கிடையிலுள்ள காலவெல்லையில் இத்தொகுதிகள் ஒவ்வொன்றினதும் பெறுமானம் அதிகரித்தது. நுகர்ச்சிப் பொருட்கள் 62 சதவீதத்தாலும், முதலீட்டப்பொருட்கள் 22 சதவீதத்தாலும், நடுத்தரமான பொருட்கள் 6 சதவீதத்தாலும் அதிகரித்தன. இச்சமதன்மையற்ற அதிகரிப்பு விகிதங்கள் கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப் பெறுமானத்தில் இம்மூன்று தொகுதிகளினதும் ஒப்பியல்பாகின்ற முக்கியத்துவத்தை மாற்றியமைத்துள்ளன. நுகர்ச்சிப்பொருட்களின் பங்கு 1960ம் ஆண்டிலிருந்து குறிப்பிடும்படியாக அதிகரித்துள்ள பொழுதிலும் நடுத்தரமான பொருட்களின் பங்கு வீழ்ச்சியடைந்தது. ஆயினும் முதலீட்டப்பொருட்களின் பங்கு கிட்டத்தட்ட மாறுதலற்று விளங்கியது.

தயாரிக்கப்பட்ட நுகர்ச்சிப் பொருட்களில் மிகக்கூடிய பகுதி உணவும், குடிவகைகளும், புகையிலையும் பல்வேறு இரசாயனப் பொருட்களும், ஆடைகளும், பாதரட்சைகளும், தோற்பொருட்களும் ஆகிய தொகுதிகளைக் கொண்டதாக இருந்தன. 1963ம் ஆண்டில் (ஒருங்கே இவையாவும்) நுகர்ச்சிப் பொருட்களின் பெறுமானத்தில் 85 சதவீதத்திற்கு வகையாயிருந்தன. 1961ம் ஆண்டுக்கும் 1963ம் ஆண்டுக்குமிடையில் இப்பொருட்களின் பெறுமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மிகவும் பெரியதாகும்; இதே காலத்தில் கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப் பெறுமானத்தில் ஏற்பட்ட ரூபாய் 1006 இலட்சங்களைக் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வதிகரிப்பு 724 இலட்சம் ரூபாய்கள் அளவாக விளங்கியது. நடுத்தரமான பொருட்களின் பெறுமானம் 1963ம் ஆண்டில் கிட்டத்தட்ட மாற்றமெதுவுமின்றி விளங்கிய பொழுதிலும் முதலீட்டப்பொருட்கள் (பிரதானமாக சிமெந்தும் சிமெந்துப்பொருட்களையும் கொண்டவை) 1961ம் ஆண்டு முதல் நிதானமாக அதிகரித்துள்ளன. சிமெந்து உற்பத்தி ரூபாய் 142 இலட்சங்களைக் கொண்ட வருடாந்தப் பெறுமானத்தின் அளவில் முன் பின் சிறிது வேறுபட்டுக் காணப்பட்டதெனினும், சிமெந்துப்பொருட்களின் உற்பத்தி தீட்சணமாக அதிகரித்தது.

---

1. ஏனைய இரு தொகுதிகளிலும் பார்க்க இவ் அளவீட்டின் கீழ் அமைந்த முதலீட்டப்பொருட்களின் அடக்கம் சிறிதாக விளங்குகின்றது. நம்பகமான தரவுகள் கிடைக்காததின் நிமித்தம் இவ் அளவீட்டிலிருந்து விலக்கப்பட்ட முதலீட்டப் பொருட்களுள் செங்கற்களும், ஓடுகளும் இடம் பெறுகின்றன.

அட்டவணை 1

# கைத்தொழில் உற்பத்தியும் வேலைநிலையும் 1960-1963 புள்ளிவிபரச் சுருக்கம்

| | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | | | | ஊழியர்களின் எண்ணிக்கை | | | | மொத்த ஆள்வேலை நாட்கள் ('000) | | | | மொத்தக் கூலிச் செலவு (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | உற்பத்தியின் பெறுமானம் (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | ஒரு ஆள்—வேலை நாளுக்கான கூலி (ரூபாய்களில்) | | | | ஒரு தொழிலாளிக்கான ஆள்—வேலை நாட்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1960 | 1961 | 1962 | 1963 | 1960 | 1961 | 1962 | 1963 | 1960 | 1961 | 1962 | 1963 | 1960 | 1961 | 1962 | 1963 | 1960 | 1961 | 1962 | 1963 | 1960 | 1961 | 1962 | 1963 | 1960 | 1961 | 1962 | 1963 |
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புக்கள் .. .. | 47 | 52 | 57 | 60 | 2,472 | 2,624 | 3,151 | 3,433 | 606 | 664 | 797 | 871 | 4.5 | 4.7 | 5.4 | 5.8 | 144.0 | 146.9 | 147.8 | 147.6 | 7.40 | 7.08 | 6.77 | 6.62 | 245 | 253 | 253 | 254 |
| II. பழுதடையாமலும், கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்களும், மரக்கறிகளும் .. | 8 | 9 | 14 | 16 | 120 | 149 | 208 | 238 | 34 | 42 | 58 | 67 | 0.1 | 0.2 | 0.2 | 0.3 | 1.3 | 1.6 | 2.3 | 3.4 | 3.94 | 3.95 | 4.16 | 4.30 | 283 | 282 | 279 | 282 |
| III. விஸ்கோத்தும், இனிப்புப் பதார்த்தங்களும் .. .. | 22 | 39 | 49 | 62 | 907 | 1,302 | 1,699 | 2,065 | 280 | 395 | 487 | 591 | 1.0 | 1.3 | 1.6 | 2.3 | 11.5 | 18.2 | 21.9 | 28.8 | 3.63 | 3.36 | 3.36 | 3.94 | 309 | 303 | 287 | 286 |
| IV. வாயுப் பானங்கள் .. | 17 | 23 | 24 | 25 | 860 | 939 | 949 | 988 | 252 | 273 | 275 | 284 | 2.0 | 2.1 | 2.1 | 2.1 | 8.3 | 7.8 | 10.0 | 11.4 | 7.94 | 7.62 | 7.56 | 7.54 | 293 | 291 | 290 | 287 |
| V. பியரும் ஸ்ரவுட்டும் .. | 1 | 1 | 1 | 1 | 187 | 198 | 309 | 303 | 58 | 61 | 67 | 68 | 0.3 | 0.3 | 0.4 | 0.4 | 3.1 | 2.4 | 2.2 | 2.4 | 5.27 | 5.34 | 5.19 | 5.45 | 308 | 308 | 309 | 303 |
| VI. புகையிலை .. .. | 23 | 23 | 23 | 23 | 3,574 | 3,664 | 3,955 | 3,960 | 975 | 1,023 | 1,104 | 1,104 | 8.2 | 8.3 | 9.2 | 9.6 | 30.0 | 29.0 | 35.0 | 39.0 | 8.41 | 8.12 | 8.37 | 8.66 | 273 | 279 | 279 | 279 |
| VII. ஆடைகள் .. .. | 22 | 24 | 32 | 34 | 2,606 | 2,787 | 3,947 | 4,500 | 768 | 816 | 1,102 | 1,261 | 2.6 | 2.9 | 3.9 | 4.3 | 19.4 | 19.8 | 29.3 | 38.4 | 3.40 | 3.56 | 3.56 | 3.43 | 295 | 293 | 279 | 280 |
| VIII. பாதரட்சைகளும், தோற்பொருட்களும் .. .. | 9 | 9 | 10 | 11 | 1,383 | 1,289 | 1,421 | 1,616 | 365 | 348 | 373 | 419 | 2.2 | 2.4 | 3.0 | 3.3 | 8.3 | 8.5 | 19.6 | 22.3 | 6.09 | 6.80 | 7.96 | 7.86 | 264 | 270 | 262 | 259 |
| IX. பல்வேறு இரசாயனப் பொருட்களும் .. .. .. | 30 | 37 | 56 | 70 | 1,569 | 1,740 | 2,070 | 2,498 | 426 | 492 | 609 | 673 | 2.2 | 3.2 | 3.8 | 4.6 | 36.4 | 40.3 | 51.5 | 56.0 | 5.68 | 7.25 | 6.33 | 6.90 | 267 | 282 | 295 | 270 |
| X. காகிதப் பொருட்களும், காகித மட்டையிலானான பொருட்களும் | 19 | 21 | 28 | 33 | 804 | 892 | 1,139 | 1,316 | 198 | 226 | 300 | 374 | 1.7 | 2.0 | 2.5 | 2.9 | 12.5 | 13.9 | 15.4 | 18.3 | 8.68 | 8.77 | 8.29 | 7.70 | 246 | 253 | 263 | 284 |
| XI. உலோகப் பொருட்கள் .. | 20 | 23 | 26 | 28 | 496 | 593 | 770 | 876 | 137 | 166 | 217 | 240 | 0.7 | 0.9 | 1.3 | 1.2 | 7.4 | 9.1 | 11.2 | 15.1 | 4.56 | 4.98 | 5.11 | 5.17 | 260 | 279 | 272 | 270 |
| XII. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) | 23 | 30 | 41 | 44 | 323 | 499 | 616 | 671 | 87 | 137 | 167 | 191 | 0.3 | 0.5 | 0.6 | 0.8 | 1.5 | 3.7 | 4.3 | 5.8 | 3.23 | 3.56 | 3.75 | 4.11 | 270 | 275 | 271 | 285 |
| XIII. பீங்கான் பொருட்கள் .. | 1 | 1 | 1 | 1 | 178 | 193 | 240 | 261 | 53 | 57 | 66 | 81 | 0.4 | 0.4 | 0.5 | 0.6 | 1.0 | 1.1 | 1.9 | 2.5 | 7.29 | 7.46 | 7.95 | 7.79 | 297 | 294 | 276 | 259 |
| XIV. இரப்பர்ப் பொருட்கள்—பாதரட்சைகள் நீங்கலாக .. | 15 | 18 | 20 | 20 | 833 | 964 | 1,022 | 1,177 | 232 | 264 | 293 | 377 | 1.3 | 1.5 | 1.7 | 2.3 | 6.8 | 8.3 | 10.9 | 13.7 | 5.43 | 5.63 | 5.81 | 6.10 | 279 | 279 | 287 | 320 |
| XV. ஒட்டுப் பலகை .. .. | 1 | 1 | 1 | 1 | 370 | 490 | 554 | 579 | 123 | 153 | 177 | 185 | 0.8 | 0.9 | 1.4 | 1.4 | 2.3 | 2.9 | 3.4 | 3.9 | 6.50 | 6.10 | 7.65 | 7.65 | 332 | 313 | 320 | 320 |
| XVI. கனிப்பொருள் மணல்கள் .. | 1 | 1 | 1 | 1 | 47 | 91 | 102 | 83 | 13 | 25 | 33 | 23 | 0.2 | 0.2 | 0.3 | 0.2 | — | 0.1 | 0.1 | 0.1 | 12.02 | 8.49 | 7.95 | 6.81 | 287 | 276 | 324 | 282 |
| XVII. கைத்தொழில்களுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் | 1 | 1 | 1 | 1 | 168 | 164 | 197 | 199 | 50 | 49 | 59 | 62 | 0.4 | 0.4 | 0.5 | 0.5 | — | 0.2 | 1.1 | 1.2 | 7.40 | 7.82 | 7.60 | 7.61 | 297 | 297 | 301 | 311 |
| XVIII. சிமெந்தும், சிமெந்துப் பொருட்களும் | 2 | 2 | 2 | 2 | 1,542 | 1,410 | 1,512 | 1,541 | 457 | 414 | 442 | 440 | 3.5 | 3.1 | 3.4 | 3.4 | 19.6 | 17.9 | 20.2 | 22.5 | 7.80 | 7.80 | 7.80 | 7.79 | 312 | 312 | 312 | 312 |
| மொத்தம் | 262 | 315 | 387 | 433 | 18,439 | 19,988 | 23,861 | 26,304 | 5,114 | 5.605 | 6,620 | 7,301 | 32.4 | 35.3 | 41.8 | 46.0 | 313.4 | 331.7 | 388.0 | 432.4 | 6.22 | 6.19 | 6.31 | 6.30 | 277 | 280 | 277 | 278 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

# கைத்தொழில் வகைகளின்படியும், பிரதான தயாரிப்புப் பொருட்களின்படியும் வகுக்கப்பட்டுள்ள கைத்தொழில் உற்பத்தியின் பெறுமானம், 1960-63



| | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | அவ்வத் தொழிலின் சதவீதமாக | | | | மொத்தக் கைத் தொழில் உற்பத்தி யின் சதவீதமாக | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1960 | 1961 | 1962 | 1963 | 1960 | 1961 | 1962 | 1963 | 1960 | 1961 | 1962 | 1963 |
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புக்கள் | 144.0 | 146.9 | 147 8 | 147.6 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 46.5 | 44.3 | 38.1 | 34.2 |
| பண்ணைப் பொருட்கள் .. | 1.9 | 3.5 | 3.0 | 4.1 | 1.3 | 2.4 | 2.0 | 2.8 | 0.6 | 1.1 | 0.8 | 0.9 |
| பண்ணை உணவுகளும், பறவை உணவுகளும் .. | 17.1 | 17.3 | 18.4 | 19.6 | 11.9 | 11.8 | 12.4 | 13.3 | 5·5 | 5.2 | 4.7 | 4.5 |
| தேங்காய்த் துருவல் .. | 13.4 | 8.8 | 11.4 | 11.0 | 9.3 | 6.0 | 7.7 | 7.5 | 4.3 | 2.7 | 2.9 | 2.5 |
| உணவுக்கான எண்ணெய்களும் கொழுப்புகளும் .. | 104.8 | 111.7 | 110.7 | 109.0 | 72.8 | 76.0 | 74.9 | 73.8 | 33.4 | 33.7 | 28.5 | 25.2 |
| உப்பு .. .. | 4.2 | 2.7 | 0.7 | 0.4 | 2.9 | 1.8 | 0.5 | 0.3 | 1.3 | 0.8 | 0.2 | 0.1 |
| ஐஸ் .. .. | 1.3 | 1.2 | 1.4 | 1.1 | 0.9 | 0.8 | 0.9 | 0.7 | 0.4 | 0.4 | 0.4 | 0.3 |
| ஏனையவை .. .. | 1.3 | 1.7 | 2.2 | 2.4 | 0.9 | 1.2 | 1.5 | 1.6 | 0.4 | 0.5 | 0.6 | 0.6 |
| II. பழுதடையாமலும், கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்களும், மரக்கறிகளும் | 1.3 | 1.6 | 2.3 | 3.4 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 0.4 | 0.5 | 0.6 | 0.8 |
| ''ஜாம்'', பழச்சாற்றுப் பசைகளும், மிளகாய் பட்சணங்களும் | 0.4 | 0.5 | 0.9 | 2.2 | 20.8 | 31.3 | 39.1 | 64.7 | 0.1 | 0.2 | 0.2 | 0.5 |
| ஏனையவை .. .. | 0.9 | 1.1 | 1.3 | 1.2 | 69.1 | 69.7 | 61.8 | 35.2 | 0.3 | 0.3 | 0.3 | 0.3 |
| III. விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களும் .. .. .. | 11.5 | 18.2 | 21.9 | 28.8 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 3.7 | 5.5 | 5.6 | 6.7 |
| விஸ்கோத்து .. .. | 6.2 | 10.5 | 12.7 | 15.7 | 53.9 | 57.7 | 58.0 | 54.5 | 2.0 | 3.2 | 3.3 | 3.6 |
| அவித்த இனிப்புப் பதார்த்தங்கள் .. .. | 3.9 | 3.4 | 5.1 | 6.6 | 33.9 | 18.7 | 23.3 | 22.9 | 1.2 | 1.0 | 1.3 | 1.5 |
| சொக்களற்றும் ரொப்பியும் .. | — | 0.7 | 1.3 | 3.1 | — | 3.8 | 5.9 | 10.8 | — | 0.2 | 0.3 | 0.7 |
| ஏனையவை .. .. | 1.5 | 3.5 | 2.8 | 3.4 | 13.0 | 19.2 | 12.8 | 11.8 | 0.5 | 1.1 | 0.7 | 0.8 |
| IV. குளிர்பானங்கள் .. .. | 8.3 | 7.8 | 10.0 | 11.4 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 2.6 | 2.4 | 2.6 | 2.6 |
| V. பியறும் ஸ்ரவுட்டும் .. | 3.1 | 2.4 | 2.2 | 2.4 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 1.0 | 0.7 | 0.6 | 0.6 |
| VI. புகையிலை .. .. | 30.0 | 29.0 | 35.0 | 39.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 9.6 | 8.7 | 9.0 | 9.0 |
| VII. ஆடைகள் .. .. | 19.4 | 19.8 | 29.3 | 38.4 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 6.2 | 6.0 | 7.6 | 8.9 |
| சேட்டுக்கள் .. .. | 7.1 | 7.3 | 14.2 | 20.7 | 36.6 | 36.9 | 48.5 | 53.9 | 2.3 | 2.2 | 3.7 | 4.8 |
| ஏனையவை (பிரதானமாக பனியன்கள்) .. .. | 12.3 | 12.5 | 15.1 | 17.7 | 63.4 | 63.1 | 51.5 | 46.3 | 3.9 | 3.8 | 3.9 | 4.1 |
| VIII. பாதரட்சைகளும்தோற் பொருட்களும் .. .. | 8.3 | 8.5 | 19.6 | 22.3 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 2.6 | 2.6 | 5.1 | 5.2 |
| IX. பல்வேறுஇரசாயனப்பொருட்கள் | 36.4 | 40.3 | 51.5 | 56.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 11.6 | 12.1 | 13.3 | 13.0 |
| மருந்துப் பொருட்கள் (கிளிசறின் உட்பட) .. .. | 2.2 | 2.5 | 1.9 | 4.2 | 6.0 | 6.2 | 3.7 | 7.5 | 0.7 | 0.8 | 0.5 | 1.0 |
| அழகு சாதனங்கள் .. | 1.6 | 1.7 | 3.5 | 5.6 | 4.4 | 4.2 | 6.8 | 10.0 | 0.5 | 0.5 | 0.9 | 1.3 |
| சவுக்காரமும், சுத்திகரப் பொருட்களும் .. | 26.9 | 28.1 | 35.1 | 34.0 | 73.9 | 69.7 | 68.2 | 60.7 | 8.6 | 8.5 | 9.0 | 7.9 |
| தீப்பெட்டிகள் .. | 3.0 | 3.8 | 5.6 | 4.5 | 8 2 | 9.4 | 10.9 | 8.0 | 1.0 | 1.1 | 1.4 | 1.0 |
| பற்பொடிகள் .. .. | 1.1 | 2.2 | 2.2 | 2.9 | 3 0 | 5.5 | 4.3 | 5.2 | 0.4 | 0.7 | 0.6 | 0.7 |
| ஏனையவை | 1.7 | 2.0 | 3.2 | 4.8 | 4.7 | 5.0 | 6.2 | 8.6 | 0.5 | 0.6 | 0.8 | 1.1 |
| X. காகிதப் பொருட்களும் காகித மட்டையினலான பொருட்களும் | 12.5 | 13.9 | 15.4 | 18.2 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 3.8 | 4.2 | 4.0 | 4.2 |
| (எழுத்து வேலைக்கான காகிதம் பரீட்சைப் புத்தகங்கள் போன்றவைகள் உட்பட) .. | 4.8 | 5.1 | 6.8 | 8.9 | 38.4 | 36.7 | 44.2 | 48.9 | 1.5 | 1.5 | 1.8 | 2.1 |
| அச்சு வேலைக்கான காகிதம் .. | 4.5 | 5.9 | 4.2 | 3.1 | 36.0 | 42.4 | 27.3 | 17.0 | 1.4 | 1.8 | 1.1 | 0.7 |
| காகிதச் சுருள்கள் .. | 0.1 | 0.5 | 0.7 | 1.7 | 0.8 | 3.6 | 4.5 | 9.3 | ... | 0.2 | 0.2 | 0.4 |
| சுற்றுறைக் காகிதம் .. | 0.7 | 0.5 | 0.5 | 1.2 | 5.6 | 3.6 | 3.2 | 6.6 | 0.2 | 0.2 | 0.1 | 0.3 |
| ஏனையவை | 2.4 | 1.9 | 3.2 | 3.3 | 19.2 | 13.7 | 20.8 | 18.1 | 0.8 | 0.6 | 0.8 | 0.8 |
| XI. உலோகப் பொருட்கள் | 7.4 | 9.1 | 11.2 | 15.1 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 2.4 | 2.7 | 2.9 | 3.5 |
| அலுமீனியப் பொருட்கள் .. | 3.0 | 4.5 | 5.3 | 7.3 | 40.5 | 49.5 | 47.3 | 48.3 | 1.0 | 1.4 | 1.4 | 1.7 |
| உலோகப் பொருட்களினலான கலன்கள் .. .. | 1.4 | 1.5 | 2.7 | 2.1 | 18.9 | 16.5 | 24.1 | 13.9 | 0.4 | 0.5 | 0.7 | 0.5 |
| முள்ளுக் கம்பிவடங்கள் .. | 0.1 | 0.2 | 0.7 | 1.1 | 1.4 | 2.3 | 6.3 | 7.3 | ... | 0.1 | 0.2 | 0.3 |
| கம்பி ஆணிகள் .. .. | 1.4 | 1.8 | 1.8 | 2.7 | 18.9 | 19.8 | 16.1 | 17.9 | 0.4 | 0.5 | 0.5 | 0.6 |
| ஏனையவை .. .. | 1.5 | 1.1 | 0.7 | 1.9 | 20.3 | 12.1 | 6.3 | 12.6 | 0.5 | 0.3 | 0.2 | 0.4 |
| XII. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (முன்புசேர்க்கப்படாதவைகள்) | 1.5 | 3.7 | 4.3 | 5.8 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 0.5 | 1.1 | 1.1 | |
| பிளாஸ்ரிக் பொருட்கள் .. | 0.7 | 2.0 | 2.5 | 3.1 | 46.7 | 54.1 | 58.1 | 53.4 | 0.2 | 0.6 | 0.6 | 1.3 |
| ஏனையவை .. .. | 0.9 | 1.5 | 1.8 | 2.7 | 60.0 | 40.5 | 41.9 | 46.6 | 0.3 | 0.5 | 0.5 | 0.7 |
| XIII. பீங்கான் பொருட்கள் .. | 1.0 | 1.1 | 1.9 | 2.5 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 0.3 | 0.3 | 0.5 | 0.6 |
| XIV. இரப்பர் பொருட்கள்—பாதரட்சைகள் நீங்கலாக .. .. | 6.8 | 8.3 | 10.9 | 13.7 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 2.2 | 2.5 | 2.8 | 0.6 |
| ரயர்களுக்குக் கோடுகள் அமைத்தல் .. .. | 4.4 | 5.3 | 6.8 | 9.1 | 64.7 | 63.9 | 62.4 | 66.4 | 1.4 | 1.6 | 1.8 | 3.2 |
| துவிச்சக்கர வண்டிகளுக்கான ரயர்களும், ரியூப்களும் .. | 1.2 | 1.7 | 2.6 | 2.7 | 17.6 | 20.5 | 23.9 | 19.7 | 0.4 | 0.5 | 0.7 | 2.1 |
| ஏனையவை | 1.2 | 1.3 | 1.5 | 2.0 | 17.6 | 15.7 | 13.8 | 14.6 | 0.4 | 0.4 | 0.4 | 0.6 |
| XV. ஒட்டுப்பலகை | 2.3 | 2.9 | 3.4 | 3.9 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 0.7 | 0.9 | 0.9 | 0.5 |
| XVI. கனிப்பொருள் மணல்கள் .. | — | 0.1 | 0.1 | 0.1 | — | 100.0 | 100.0 | 100.0 | — | ... | ... | 0.9 |
| XVII. கைத்தொழில்களுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் | — | 0.2 | 1.1 | 1.2 | -- | 100.0 | 100.0 | 100.0 | — | 0.1 | 0.3 | ... 0.3 |
| XVIII. சிமெந்தும், சிமெந்துப் பொருட்களும் | 19.6 | 17.9 | 20.2 | 22.5 | 100 0 | 100.0 | 100.0 | 100.0 | 6.3 | 5.4 | 5 2 | 5.2 |
| மொத்தம் | 313.4 | 331.7 | 388.0 | 432.0 | | | | | 100.0 | 100.0 | 100 0 | 100.0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

1963ம் ஆண்டு கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப் பெறுமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பாகிய 447 இலட்சம் ரூபாய்களின் அரைவாசியிலும் சிறிது குறைந்த தொகை, மூன்று கைத்தொழில்களில் ஏற்பட்ட விரிவினால் எழுந்ததாகும். அவையாவன, ஆடைகள், விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த் தங்களும், பல்வேறு இரசாயனப் பொருட்களுமாகும். இவை ஒருங்கே ரூபாய் 205 இலட்சங்களைக் கொண்டவோர் அதிகரிப்பைக் காட்டுகின்ற பொழுதிலும் வேறு நான்கு கைத்தொழில்கள்—புகையிலை, உலோகப்பொருட் கள், பாதரட்சைகளும், தோற்பொருட்களும், காகிதமும், காகித மட்டை யும் ஆகியவை—134 இலட்சம் ரூபாய்களைக் கொண்டவோர் அதிகரிப்பைக் காட்டுகின்றன. விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களும், ஆடைகளும், பல்வேறு இரசாயனப் பொருட்களுமாகிய கைத்தொழில்களில் 1960ம் ஆண்டுக்குப்பின் சிறிய தொழில் நிலையங்களின் எண்ணிக்கை பெருமளவால் அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பு தொழில் நிலையங்களில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பில் 50 சதவீதத்திற்கும் கூடியதாக விளங்குகின்றது. இக்கைத் தொழிற் தொகுதியினேர் அம்சம் என்னவெனில் உற்பத்தியில் வருடாந்தம் ஏற்படுகின்ற உயர்ந்த அதிகரிப்பேயாகும். எனினும் இவ்வதிகரிப்பிற்குக் கிட்டத்தட்ட நிலைபெறுள்ளவோர் சிறிய அளவு தொழில் நிலையங்களின் உற்பத்தி வலிமையில் ஏற்பட்ட தீட்சணமான விரிவே காரணமாகும். பெறுமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய பாகம் ஒரு சிறிய அளவு பொருட்களையே சார்ந்ததாகும். எனவே 1961ம் ஆண்டுக்கும், 1963ம் ஆண்டுக்குமிடையில் சவுக்காரத்தின் உற்பத்தி (சுத்திகரப் பொருட்கள் அடங்கலாக) 60 இலட்சம் ரூபாய்களாலும், அழகு சாதனங்கள் 39 இலட்சம் ரூபாய்களாலும், விஸ்கோத்தும் (1961ம் ஆண்டில் ஏற்பட்ட 43 இலட்சம் ரூபாய்கள் கொண்ட விரிவிற்குப்பின்) 52 இலட்சம் ரூபாய்களாலும், இனிப் புப் பதார்த்தங்கள் 56 இலட்சம் ரூபாய்களாலும், சேட்டுகள் 134 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்தன. இக் கைத்தொழில்களிலுள்ள சிறிய தொழில் நிலையங்கள், குறைந்த மொத்தப் பெறுமானத்தையுடைய பல்வேறு தரப் பட்ட பொருட்களை உதாரணமாக, ஆடைகள் என்ற கைத்தொழிலில், நீளக் காற்சட்டைகள், கட்டைக் காற்சட்டைகள், மார்புக் கச்சைகள், கைக் குட்டைகள், ஆண்களின் உள் உடைகள் ஆகியனவற்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தன.

முந்தைய பந்தியிலுள்ள கைத்தொழில்களின் இரண்டாம் தொகுப்பில் பெறுமானத்தின் பொதுவான விரிவிற்கு உதவுகின்றதென குறிப்பிடப் பட்டுள்ள பாதரட்சைகளினதும் தோற்பொருட்களினதும் உற்பத்தியில் 1963ம் ஆண்டு ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் அவ்வாண்டுக்கான கைத்தொழில் உற்பத்தியின் பொதுப்படையான அதிகரிப்பு வீதத்துடன் ஒத்ததாகவிருந்த தெனினும், 1962ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டின் பெறு மானத்தில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பு சடுதியான ஓர் வீழ்ச்சியைக் காட்டியது. 1962ம் ஆண்டு உற்பத்தியில் ஏற்பட்ட அசாதாரணமான விரைந்த அதிகரிப்பே இதற்குக் காரணமாகும். தோற்பொருள் கூட்டுத் தாபனத்தின் வலிமையில் அவ்வருடம் ஏற்பட்ட விரிவு, இக்கைத்தொழி லின் முழுமையான உற்பத்தியைக் கிட்டத்தட்ட தற்பொழுதுள்ள கேள்வி யின் மட்டத்திற்கு உயர்த்தியது. எனவே நுகர்ச்சியைச் சமாளிக்கும் பொருட்டு 1963ம் ஆண்டின் உற்பத்தியில் மேலும் ஏற்பட வேண்டிய அதிகரிப்பு ஒப்பியல்பில் சிறிதாகும். கடந்த சில ஆண்டுகளில் பாதரட்சை களின் நுகர்ச்சி குறிப்பிடும்படி அதிகரித்துள்ளது. உள்நாட்டுச் சந்தை அடிப் படையில் இக்கைத்தொழிலின் எதிர்கால விரிவு அதிகரித்த சொந்த வரு மானங்களையும் சமூக மாற்றத்தையும் பொறுத்தே அமையவேண்டியதாகும். கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட புதிய கேள்வியில் ஓர் கணிசமான பகுதி, செருப்புகள், வார்ச் சப்பாத்துகள் போன்ற குறைந்த விலைகளையுடைய உஷ்ணப்பிரதேச பாதரட்சை வகைகளின் மேல் உண்டானது.

உலோகப்பொருட்களின் கைத்தொழில் 1960ம் ஆண்டு முதல் தளராத வோர் வளர்ச்சியைக் காட்டியது. இவ்வளர்ச்சி இக்கணிப்பின் கடைசி ஆண்டில் மிகவும் குறிப்பிடும்படியாக விளங்கியது. 1960ம்-1963ம் ஆண்டுகளில் இத்துறையின் உற்பத்திப் பெறுமானம் இருமடங்கிலும் கூடிய அளவால் அதிகரித்தது. ஒப்பியல்பில் மொத்தப் பெறுமானம் (1963ம் ஆண்டு 151 இலட்சம் ரூபாய்கள்) சிறிதாக விளங்குகின்ற பொழுதிலும், இக் கைத்தொழில் தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க அளவு முக்கியம் வாய்ந்ததொன்றாகும். அட்டவணை IIIல் உள்ளபடி, 1963ம் ஆண்டுக்கான உலோகப்பொருட்களின் மொத்த உற்பத்திப் பெறுமானத்தில் நாலில் ஒரு பகுதி முதலீட்டப் பொருட்களைக் கொண்டதாக விளங்கியது. இது சம்பந்தப்பட்ட பொருட்கள், கம்பி ஆணிகளும், முட் கம்பி வடங்களும், நாகம்பூசிய பொருட்களுமாகும். 1960ம் ஆண்டிற் தயாரிக் கப்பட்ட கம்பிஆணிகளினதும் முட்கம்பி வடங்களினதும் பெறுமானமாகிய 14 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டு இது 27 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட இவ் வதிகரிப்பிற்கு ஒப்பியல்பாகும் வகையில் இவ்விரண்டு பொருட்களினதும் இறக்குமதியிலோர் வீழ்ச்சி ஏற்பட்டது. ஒப்பியல்பில் சிறிய அளவு பெறுமானத்தை ஊட்டுவதே உலோகப் பொருட்களின் கைத்தொழிலில் (முக்கியமாக அலுமினியப் பாத்திரங்களின் தயாரிப்பில்) இதுகாறும் ஒரு அம்சமாக விளங்கி வந்ததெனினும், 1963ம் ஆண்டு இவ்வாறு ஊட்டப்பட்ட பெறுமானம், இக்கைத்தொழிலின் மொத்த உற்பத்திப் பெறுமானத்தில் அரைவாசியளவுக்கு வகை கூறியது. பிரதானமாக அலுமினியப் பாத்திரங்கள் உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்களின் சம்பளக் கொடுப்பனவு விகிதசமம், (70 இலட்சம் ரூபாய்கள் அளவில் விளங்கிய) உற்பத்திப் பெறுமானத்தில் 9 சதவீதத்திலும் குறைவாகவே விளங்கியது. மூலப் பொருட்களின் முக்கியத்துவம் உயர்ந்து விளங்கும் உற்பத்திகளும், மூலதனச் செறிவு உயர்ந்து விளங்கும் உற்பத்தி முறைகளும் இக்குறைந்த கூலி விகிதத்திற்குக் காரணமாக விளங்குகின்றன. காகிதப் பொருட்களினதும், காகித மட்டைப் பொருட்களினதும் தயாரிப்பானது, 1960ம் ஆண்டு முதலாகத் தொடர்ச்சியாக விரிவடைந்து 1963ம் ஆண்டின்போது அதன் அதிகரிப்பு வீதத்தில் ஓர் மெச்சத்தக்க விரைவினைக் கொண்டிருந்தது. 1963ம் ஆண்டு 182 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய இத்துறையின் மொத்தப் பெறுமானத்தில் மூன்றில் இரண்டு பங்கு நுகர்ச்சிப் பொருட்களுக்கு (பிரதானமாகப் பயிற்சி வேலைக்கான புத்தகங்கள் அடங்கலாக எழுத்து வேலைக்கான காகிதம்) வகை கூறிய பொழுதிலும், சுற்றுறைக் காகிதங்களையும், சுற்றுறைப்பெட்டிகளையும், ஏனைய சுற்றுறைப் பொருட்களையும் கொண்ட நடுத்தரப் பொருட்கள் எஞ்சிய மூன்றில் ஒரு பங்கிற்கு வகைதந்தன. இக்கைத்தொழிலில் ஏற்பட்ட விரிவு நுகர்ச்சிப் பொருட்களின் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் தொடர்புள்ளதாக விளங்குகின்றது. அதாவது நுகர்ச்சிப் பொருட்களின் துறையிலுள்ள பாதரட்சைகள், ஆடைகள், இனிப்புப் பதார்த்தங்கள் ஆகியவற்றின் விற்பனைகளின் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு சுற்றுறைப் பொருள்களுக்கான கேள்வியைத் தூண்டிவிட்டுள்ளது. (கைத்தொழில் உபயோகத்திற்காக உலோகப் பொருட்களினால் செய்யப்பட்ட கலங்களின் தயாரிப்பில் ஏற்பட்ட விரிவும் ஒரு சமாந்தரமான விளைவாகும்). காகிதக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியில் ஏற்படும் விரிவுடன், காகிதச் சுற்றுறைக் கைத்தொழிலுக்கான பொருட்களை வழங்குவதன் மூலம், காகிதப் பொருட் கைத்தொழிலின் மொத்த உற்பத்திப் பெறுமானத்தில் அந்நிய செலாவணியின் பங்கு படிப்படியாகச் சிறிதாகுமென நம்பப்படுகின்றது.

பாதரட்சைகள் நீங்கலான இரப்பர் பொருட்களின் கைத்தொழில், அளவையின் கீழுள்ள காலப்பகுதியில் தளராது விரிவடைந்தது. முந்தைய

அட்டவணை III

## கைத்தொழில் உற்பத்தியின் பெறுமானம், 1960-63
## பிரதான பொருளாதாரப் பாகுபாடுகளின்படி

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | சதவீதம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1960 | 1961 | 1962 | 1963 | 1960 | 1961 | 1962 | 1963 |
| **அ. நுகர்ச்சிப் பொருட்கள் ..** | **170·3** | **186·6** | **236·1** | **275·1** | **54·3** | **56·3** | **60·8** | **63·7** |
| உணவும் குடிவகையும், புகையிலையும் .. .. | 87·8 | 94·8 | 105·0 | 119·1 | 28·0 | 28·6 | 27·1 | 27·6 |
| பல்வேறு உணவுத் தயாரிப்புகள் (1) .. .. .. | 33·6 | 35·8 | 33·6 | 34·1 | 10·7 | 10·8 | 8·7 | 7·9 |
| பழுதடையாமலும், கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்களும், மரக்கறிகளும் (2) .. | 1·3 | 1·6 | 2·3 | 3·4 | 0·4 | 0·5 | 0·6 | 0·8 |
| விஸ்கோத்தும், இனிப்புப் பதார்த்தங்களும் .. | 11·5 | 18·2 | 21·9 | 28·8 | 3·7 | 5·5 | 5·6 | 6·7 |
| வாயுப்பானங்கள் .. | 8·3 | 7·8 | 10·0 | 11·4 | 2·6 | 2·4 | 2·6 | 2·6 |
| பியரும் ஸ்ரவுட்டும் .. | 3·1 | 2·4 | 2·2 | 2·4 | 1·0 | 0·7 | 0·6 | 0·6 |
| புகையிலை .. .. | 30·0 | 29·0 | 35·0 | 39·0 | 9·6 | 8·7 | 9·0 | 9·0 |
| ஆடைகள் (3) .. | 19·4 | 19·8 | 29·3 | 38·4 | 6·2 | 6·0 | 7·5 | 8·9 |
| பாதரட்சைகளும் தோற்பொருட்களும் .. .. | 8·3 | 8·5 | 19·6 | 22·3 | 2·6 | 2·6 | 5·0 | 5·2 |
| பல்வேறு இரசாயனப்பொருட்கள் (4) .. .. | 36·4 | 40·3 | 51·5 | 56·0 | 11·6 | 12·1 | 13·3 | 13·0 |
| காகிதப் பொருட்களும் காகித மட்டைப் பொருட்களும் (5) .. | 7·2 | 7·0 | 10·0 | 12·2 | 2·3 | 2·1 | 2·6 | 2·8 |
| உலோகப் பொருட்கள் (6) .. | 3·0 | 4·5 | 5·3 | 7·3 | 1·0 | 1·4 | 1·4 | 1·7 |
| தயாரிக்கப்பட்ட பொருட்கள் (மு.சே.ப.) (7) .. .. | 1·5 | 3·7 | 4·3 | 5·8 | 0·5 | 1·1 | 1·1 | 1·3 |
| பீங்கான் பொருட்கள் .. | 1·0 | 1·1 | 1·9 | 2·5 | 0·3 | 0·3 | 0·5 | 0·6 |
| இரப்பர் பொருட்கள் (8) .. | 5·7 | 6·9 | 9·2 | 11·5 | 1·8 | 2·1 | 2·4 | 2·7 |
| **ஆ. நடுத்தரமான பொருட்கள் ..** | **119·4** | **122·7** | **126·9** | **126·8** | **38·0** | **37·0** | **32·7** | **29·3** |
| பல்வேறு உணவுத்தயாரிப்புக்கள் (9) | 110·4 | 111·1 | 114·2 | 113·5 | 35·2 | 33·5 | 29·4 | 26·2 |
| உலோகப் பொருட்கள் (10) .. | 1·4 | 1·5 | 2·7 | 2·1 | 0·4 | 0·4 | 0·7 | 0·5 |
| காகிதப் பொருட்களும், காகித மட்டைப் பொருட்களும் (11) | 5·3 | 6·9 | 5·4 | 6·0 | 1·7 | 2·1 | 1·4 | 1·4 |
| ஒட்டுப்பலகை .. .. | 2·3 | 2·9 | 3·4 | 3·9 | 0·7 | 0·9 | 0·9 | 0·9 |
| கனிப்பொருள் மணல்கள் .. | — | 0·1 | 0·1 | 0·1 | — | — | — | — |
| கைத்தொழில்களுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் (12) .. .. | — | 0·2 | 1·1 | 1·2 | — | 0·1 | 0·3 | 0·3 |
| **இ. முதலீட்டப் பொருட்கள் ..** | **23·7** | **22·4** | **25·1** | **30·4** | **7·7** | **6·7** | **6·5** | **7·0** |
| உலோகப் பொருட்கள் (13) | 3·0 | 3·1 | 3·2 | 5·7 | 1·0 | 0·9 | 0·8 | 1·3 |
| இரப்பர் பொருட்கள் (14) .. | 1·1 | 1·4 | 1·7 | 2·2 | 0·4 | 0·4 | 0·4 | 0·5 |
| சிமெந்தும், சிமெந்துப் பொருட்களும் .. .. | 19·6 | 17·9 | 20·2 | 22·5 | 6·3 | 5·4 | 5·2 | 5·2 |
| மொத்தம் .. | 313·4 | 331·7 | 388·0 | 432·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

குறிப்புகள்:—

1. பாற்பண்ணைப் பொருட்கள் (ஐஸ்கிரீம் உட்பட), உட்கொள்ளக்கூடிய எண்ணெய்கள், கொழும்புகள் முதலியன.
2. பழக்குழம்புகள், ''ஜெலிகள்'', சுவைக்கூட்டுகள், பழங்களினுற் செய்த தீம்பானங்கள் முதலியன.
3. சேட்டுகள், பனியன்கள் முதலியன.
4. மருந்துப்பொருட்கள், வண்ணப்பொருட்கள், சவர்க்காரங்கள், சுத்திகரிக்கும் பொருட்கள், தீக்குச்சிகள், பற்பசை முதலியன.
5. எழுதும்தாள், பயிற்சிப்புத்தகங்கள் முதலியன.
6. அலுமினியக்கலங்கள்.
7. பிளாஸ்டிக் பொருட்கள் முதலியன.
8. ரயர்களுக்குக் கோடமைத்தல், சயிக்கிள் ரயர்களும், ரியூப்களும், விளையாட்டுப்பொருட்களும் வீட்டுத் தேவைக்கான பொருட்களும்.
9. பாற்பண்ணைப் பொருட்கள், கோழிப்பண்ணைப் பொருட்கள், எண்ணெய்கள், கொழுப்புகள், ஐஸ், தேங்காய்த்துருவல், முதலியன.
10. கலங்கள்.
11. அச்சடித்தற் காகிதமும், காகிதச் சுருள்களும், ஏனைய சுற்றுறைப் பெட்டிகளும், சுற்றுறைக் காகிதமும்.
12. எரிசோடாவும், குளோரினும்.
13. முட்கம்பி, கம்பி ஆணிகள், நாகம் பூசிய பொருட்கள், முதலியன.
14. ரயர்களுக்குக் கோடமைத்தல்.

ஆண்டுகளில் எந்த ஓர் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பையும்விட, 1963ம் ஆண்டுக்கான உற்பத்தியில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பு உயர்ந்து விளங்குகின்றது. இரப்பர் ரயர்களுக்கு மீண்டும் கோடுகள் அமைத்தல், (இது அட்டவணை IIIல் நடுத்தரப் பொருட்களின் கீழும், நுகர்ச்சிப் பொருட்களின் கீழும், பதிவு செய்யப்பட்ட வர்த்தக மோட்டார் வண்டிகளை ஏனைய வண்டிகளின் தொகையின் விகிதாச்சாரமாக்குவதன் மூலம் பாகுபடுத்தப்பட்டுள்ளது) முழுக் கைத்தொழிலினதும் உற்பத்தியின் பெறுமானத்தில் மூன்றில் இரண்டு பகுதியைத் தழுவியதாக விளங்கிற்று. துவிச்சக்கர வண்டி ரயர்களும், ரியூப்களும் அத்துடன் ஒரு நியாயமான பரந்த வகையான வீட்டு உபயோகப்பொருட்களின் பரந்த தயாரிப்புகளும், மோட்டார் வண்டிகளுக்கான துணைக்கருவிகளும் (பிரதானமாக இரப்பர் தூரிகைகள்) இக்கைத்தொழிலின் எஞ்சிய உற்பத்திப் பொருட்களாகும். 1963ம் ஆண்டு இக்கைத்தொழிலில் ஏற்பட்ட விரிவிற்கு ரயர்களுக்கு மீண்டும் கோடுகள் அமைத்தலில் ஏற்பட்ட மெச்சத்தக்க அதிகரிப்பே பெருமளவு காரணமாக விளங்குகின்றது. இவ்வதிகரிப்புத் தொகை 23 இலட்சம் ரூபாய்களாக, அல்லது சென்ற வருடத்தின் மொத்த உற்பத்தியில் மூன்றிலொருபங்காக உள்ளது. 1962-1963ம் ஆண்டுகளில் ரயர்களுக்கு மீண்டும் கோடுகள் அமைக்கும் தொழில் நிலையங்களின் எண்ணிக்கை நிலைவரமாக்கப்பட்டுள்ளதெனத் தோன்றுகின்றதாகையால், இவ்வாண்டுகளில் உற்பத்தியில் ஏற்பட்ட விரிவு, வளரும் கேள்வியைத் திருப்தி செய்யும் பொருட்டு, நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களின் கொள்ளளவுகளை அதிகமாகப் பயன்படுத்தியமையால் ஏற்பட்டதாகும். 1963ம் ஆண்டில் மோட்டார் வண்டிகளுக்கான ரயர்களினதும், மோட்டார் சைக்கிள்களுக்கான ரயர்களினதும் இறக்குமதிகளின் பெறுமானம் 37 சதவீதமளவால் தீட்சணமாக வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாகக் கோடு அமைப்பதற்குக் கிடைக்கக்கூடிய ரயர்க்ளில் எழுந்த தட்டுப்பாடு, அண்மையில் ரயர்ச் சடலங்கள் இறக்குமதி செய்வதன் மூலம் தீர்த்து வைக்கப்பட்டது. 1962ம் ஆண்டு இத்துறையில் உபயோகிக்கப்பட்ட மூலப் பொருட்களின் பெறுமானத்தில் மூன்றில் இரண்டு பங்களவு பச்சை இரப்பராகும். எனவே இரப்பர் பொருட் கைத்தொழிலின் உற்பத்திப் பெறுமானத்தில் அந்நிய செலாவணியின் பங்கு மிகச் சிறியதாகும்.

தயாரிக்கப்பட்ட தெங்குப் பொருட்கள் (எண்ணெய், தேங்காய்த் துருவல், புண்ணுக்கு ஆகியவை) பல்வகை உணவுத் தயாரிப்புக் கைத்தொழிலில் மிகவும் உயர்ந்த பங்கை வகிக்கின்றன. இக்கைத்தொழிலின் மொத்த உற்பத்திப் பெறுமானத்தில் 90 சதவீதத்திலும் அதிகமானவற்றிற்கு தெங்குப் பொருட்களின் தயாரிப்புகள் உதவுகின்றன. எஞ்சியவை பிரதானமாகப் பண்ணை பொருட்களிலிருந்து (வெண்ணெய், நெய், பாலாடை, ஐஸ்கிரீம்) பெறப்படுகின்றன. இவை 1960ம் ஆண்டு முதலாகத் தளராத வோர் விரிவைக் காட்டி வந்துள்ளன. 1963ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட எண்ணெயினதும், தேங்காய்த் துருவலினதும் பெறுமானம் சிறிதளவு மட்டுமே வீழ்ச்சியுற்ற பொழுதிலும் தேங்காய்களின் கிடைப்புத்தன்மை சுருங்கியதன் காரணமாக உற்பத்தியிற் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டது. ஒப்பியல்பில் எண்ணெய்க் குற்றலினதும், தேங்காய்த் துருவலினதும் நிகர வருமானம் உற்பத்தியில் ஏற்பட்ட சுருக்கங்களினால் பாதிக்கப்படவில்லை. ஆயினும், தேங்காயெண்ணை சம்பந்தப்பட்டவரையில், இப்பொருட்களின் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் பயனாக குற்றற்பொறி இயக்குநர்களுக்கு ஏற்பட்ட கொப்பராவின் அதிகரித்த விலை ஒப்பியல்பில் நிகர வருமானத்தைப் பாதிக்கவில்லை.

**கைத்தொழில் செறிவின் அமைப்பு**

ஒரு கைத்தொழிலின் கிளைகளுக்கிடையிலும், காலப்போக்கில் அளவினிலே ஏற்படும் மாற்றங்கள் சம்பந்தப்பட்ட வகையிலும், தயாரிப்புத் தாபனங்களினது அளவில் உள்ள வேறுபாடுகள் ஓர் வளர்ச்சியுறும் கைத்தொழிற் போக்கின் முக்கிய அம்சமாகும். 1963ம் ஆண்டிலுள்ள உற்பத்தி செய்யும் தொழில்

அட்டவணை IV

## அளவு அமைப்பின்படி, 1963ம் ஆண்டில் உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்கள் உற்பத்திப் பெறுமானத்தின் அடிப்படையில்

| | | உற்பத்திப் பெறுமானம் | | | |
|---|---|---|---|---|---|
| | | 250000 ரூபாய் களுக்கு கீழ்ப் பட்ட வை | 250,000 ரூபாய் களுக்கு மேற்பட் டவையும், 20 இலட் சம் ரூபாய் களுக்குக் கீழ்ப்பட்ட வையும் | 20 இலட் சம் ரூபாய் களுக்கு மேற்பட் டவை | மொத்தம் |
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புகள் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | | கிடைக்கவில்லை | | |
| II. பழுதடையாமலும் கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்களும், மரக்கறிகளும் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 14 | 1 | 1 | 16 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 25·0 | 10·4 | 64·6 | 100·0 |
| III. விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களும் .. .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 44 | 16 | 2 | 62 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 12·0 | 36·0 | 52·0 | 100·0 |
| IV. வாயுப் பானங்கள் .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 20 | 4 | 1 | 25 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 11·5 | 31·5 | 57·0 | 100·0 |
| V. பியரும், ஸ்ரவுட்டும் .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | — | — | 1 | 1 |
| | உற்பத்தியின் சதவீதமாக | — | — | 100·0 | 100·0 |
| VI. புகையிலை .. .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 10 | 9 | 5 | 24 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 3·4 | 13·6 | 83·0 | 100·0 |
| VII. ஆடைகள் .. .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 13 | 15 | 6 | 34 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 2·7 | 26·5 | 70·0 | 100·0 |
| VIII. பாதரட்சைகளும், தோற் பொருட்களும் .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 5 | 3 | 3 | 11 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 4·0 | 4·5 | 91·5 | 100·0 |
| IX. பல்வேறு இரசாயனப் பொருட்கள் | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 49 | 17 | 4 | 70 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 5·7 | 20·3 | 74·0 | 100·0 |
| X. காகிதப் பொருட்களும் காகித மட்டைப் பொருட்களும் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 17 | 15 | 1 | 33 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 5·8 | 50·3 | 43·9 | 100·0 |
| XI. உலோகப் பொருட்கள் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 13 | 14 | 1 | 28 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 9·4 | 63·6 | 27·0 | 100·0 |
| XII. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 38 | 5 | — | 43 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 57·8 | 42·2 | — | 100·0 |
| XIII. பீங்கான் பொருட்கள் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | — | — | 1 | 1 |
| | உற்பத்தியின் சதவீதமாக | — | — | 100·0 | 100·0 |
| XIV. இரப்பர் பொருட்கள்—பாதரட்சைகள் நீங்கலாக .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 9 | 8 | 3 | 20 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 9·5 | 26·7 | 63·8 | 100·0 |
| XV. ஒட்டுப் பலகை .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | — | — | 1 | 1 |
| | உற்பத்தியின் சதவீதமாக | — | — | 100·0 | 100·0 |
| XVI. கனிப்பொருள் மணல்கள் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 1 | — | — | 1 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 100·0 | — | — | 100·0 |
| XVII. கைத் தொழில்களுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | — | 1 | — | 1 |
| | உற்பத்தியின் சதவீதமாக | — | 100·0 | — | 100·0 |
| XVIII. சிமெந்தும், சிமெந்துப் பொருட்களும் .. .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | — | — | 2 | 2 |
| | உற்பத்தியின் சதவீதமாக | — | — | 100·0 | 100·0 |
| மொத்தம் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 233 | 108 | 32 | 373 |
| | உற்பத்தியின் சதவீதமாக | 6·2 | 21·1 | 72·7 | 100·0 |

மூலம்:—இலங்கை மகா வங்கி.

அட்டவணை V

## அளவு அமைப்பின்படி, 1963ம் ஆண்டில் உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்கள் கூலிச் செலவின் அடிப்படையில்

| | | 15,000 ரூபாய்களுக்குக் கீழ்ப்பட்டவை | 15,000 ரூபாய்களுக்கு மேற்பட்டவையும் 500,000 ரூபாய்களுக்குக் கீழ்ப்பட்டவையும் | 50,000 ரூபாய்களுக்கு மேற்பட்டவையும், 500,000 ரூபாய்களுக்குக் கீழ்ப்பட்டவையும் | 500,000 ரூபாய்களுக்கு மேற்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புகள் .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | | | | | |
| | கூலிச் செலவின் சதவீதமாக | | | கிடைக்கவில்லை | | |
| II. பழுதடையாமலும், கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்களும், மரக்கறிகளும் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 9 | 6 | 1 | — | 16 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | 13·2 | 44·4 | 42·4 | — | 100·0 |
| III. விஸ்கோத்தும், இனிப்புப் பதார்த்தங்களும் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 37 | 13 | 7 | 1 | 58 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | 8·8 | 16·6 | 30·8 | 43·8 | 100·0 |
| IV. வாயுப் பானங்கள் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 14 | 6 | 4 | 1 | 25 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | 3·2 | 4·5 | 34·1 | 58·1 | 100·0 |
| V. பியரும், ஸ்ரவுட்டும் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | — | — | — | 1 | 1 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | — | — | — | 100·0 | 100·0 |
| VI. புகையிலை .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | | | கிடைக்கவில்லை | | |
| | கூலிச் செலவின் சதவீதமாக | | | | | |
| VII. ஆடைகள் .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 9 | 15 | 10 | 2 | 36 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | 1·4 | 10·7 | 44·8 | 43·1 | 100·0 |
| VIII. பாதரட்சைகளும், தோற்பொருட்களும் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 5 | 2 | 2 | 2 | 11 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | 1·2 | 1·9 | 16·7 | 80·0 | 100·0 |
| IX. பல்வேறு இரசாயனப் பொருட்கள் .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 39 | 18 | 12 | 1 | 70 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | 4·6 | 11·3 | 42·5 | 41·7 | 100·0 |
| X. காகிதப் பொருட்களும் காகித மட்டைப் பொருட்களும் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 17 | 8 | 7 | 1 | 33 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | 5·3 | 8·1 | 16·4 | 70·2 | 100·0 |
| XI. உலோகப் பொருட்கள் | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 7 | 15 | 6 | — | 28 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | 4·9 | 37·3 | 57·7 | — | 100·0 |
| XII. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 23 | 19 | 1 | — | 43 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | 21·7 | 66·7 | 11·6 | — | 100·0 |
| XIII. பீங்கான் பொருட்கள் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | — | — | — | 1 | 1 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | — | — | — | 100·0 | 100·0 |
| XIV. இரப்பர் பொருட்கள்—பாதரட்சைகள் நீங்கலாக .. .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 5 | 6 | 8 | 1 | 20 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | 1·8 | 7·1 | 64·2 | 26·8 | 100·0 |
| XV. ஒட்டுப்பலகை .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | — | — | — | 1 | 1 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | — | — | — | 100·0 | 100·0 |
| XVI. கனிப்பொருள் மணல்கள் .. .. .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | — | — | 1 | — | 1 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | — | — | 100·0 | — | 100·0 |
| XVII. கைத்தொழில்களுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் . | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | — | — | — | 1 | 1 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | — | — | — | 100·0 | 100·0 |
| XVIII. சிமெந்தும், சிமெந்துப் பொருட்களும் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | — | — | — | 2 | 2 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | — | — | — | 100·0 | 100·0 |
| மொத்தம் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 165 | 108 | 59 | 15 | 347 |
| | கூலிச் செலவின் சதவீதமாக | 5·3 | 12·0 | 21·6 | 61·1 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

நிலையங்களின் அமைப்பை, ஒவ்வொரு தொழில் நிலையத்தின் உற்பத்திப் பெறுமானத்தின் அடிப்படையிலும், கூலிச் செலவின் அடிப்படையிலும் அட்டவணைகள் IVலும் Vதும் காட்டுகின்றன. போதிய தரவுகள் கிடைக்கப் பெற்றுள்ள கைத்தொழில்களை ஒப்பிடுவதற்காகவும், தொழில் நிலையங்களின் அளவு அமைப்பிலுள்ள திட்சணமான தொடர்ச்சியற்ற தன்மைகளுக்கு இடமளிக்கும் பொருட்டும், தொழில் நிலையங்கள் உற்பத்தியினதும், கூலி களினதும் சில நுட்பமான மட்டங்களின்படி வகுக்கப்பட்டுள்ளன. தொழில் நிலையங்கள், சிறியவை, நடுத்தரமானவை, பெரியவை என மூன்று தொகுதி களாக உற்பத்தியின் அடிப்படையில் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. தொழில் நிலையங்களின் அளவு என்பது 1963ம் ஆண்டில் அவற்றின் உண்மைத் தொழிற்படு வலிமையைக் குறிக்கின்றதேயன்றி, அத்தொழில் நிலையங்களின் உற்பத்தி செய்யத்தக்க முழு வலிமையையும் குறிக்கவில்லை. தொழில் நிலையங்களின் முழு உற்பத்தி வலிமையைப் பற்றிய தகவல் ஒன்றுமே கிடைக்கவில்லை.

இவ் அட்டவணைகளில் உபயோகிக்கப்பட்டுள்ள அளவு சம்பந்தமான இரு அடிப்படைகளிலும், ஒரு கைத்தொழிலின் மொத்த உற்பத்தியின் ஒப்பியல்பான பங்கைத் தருகின்ற உற்பத்தியின் பெறுமானம், கைத்தொழிலில் நிலவிவரும் செறிவின் அளவைக் காட்டும் கூலிச் செலவிலும் பார்க்கக் கூடிய உபயோகமுள்ளதாகும். உற்பத்தியினது மூலதனச் செறிவிலுள்ள வேறுபாடுகளின் காரணமாக, கூலிச்செலவு நியதியின்படி பெரிதென விளங்கும் தொழில் நிலையங்கள், உற்பத்தி நியதியின்படி சிறிதாக விளங்க முடியும். உற்பத்திப் பெறுமானங்கள், தேவையான தொழிற்படு மூலதனத்தின் தொகையை வயப்படுத்துவதுடன், தொழில் நிலையங்களின் நிதி வலிமை யையும், சிறு தவணை நிதிகளை அடைவதற்கு அவற்றிற்குள்ள வலிமையையும் பிரதிபலிப்பனவாகும். மறுபக்கத்தில் கூலிச் (சம்பளச்) செலவின்படியான ஒரு பாகுபாடு, வேலை நிலைக்குத் தொழில் நிலையங்கள் நேரடியாக உதவிய அளவைக் காட்டுவதைவிட, தயாரிப்பினால் ஊட்டப்பட்ட பெறுமானத் திலுள்ள வேறுபாடுகளையும் எடுத்துக் காட்ட உதவக்கூடும். ஆயினும், இவ் விடயத்தை நுட்பமாக ஆராய்வதற்கு இலாபங்களும், தேய்மானமும் அத்துடன் கூலிகளும், சம்பளங்களும் போன்றமிக விரிவான தரவுகள் வேண்டும். கைத்தொழில்களை ஒப்பிடும் நோக்கத்துடன் உபயோகிக்கப் படும் பொழுது கூலிச் (சம்பளச்) செலவானது, (மூலதனச் செறிவில் குறிப்பிடும் படியான வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தால்) ஊட்டப்பட்ட பெறுமானத்தின் ஓர் பலவீனமான காட்டியாக விளங்கக்கூடும். ஆயினும், ஒப்பியல்பில் தொழிலாளருக்கெதிராக உயர்ந்த விகிதமான மூலதனத்தைப் பாவிப்பதன் மூலம் ஊட்டப்பட்ட பெறுமானத்திலோர் விகித சமமற்ற உயர்ந்த பங்கு மூலதனத்தையே சாரும். பொருள் கோடலினால் எழும் இவ் இடர்ப்பாடு களுக்கமைய, கைத்தொழிற் செறிவின் அளவை விளக்கிக் காட்டும்படியாக அட்டவணைகளிலுள்ள தரவுகள் அளிக்கப்பட்டுள்ளன.

இப் படிப்பிற்கெனக் கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி, 1963ம் ஆண்டின் உற்பத்தித் தொழில் நிலையங்களின் மொத்த எண்ணிக்கையில், 62 சதவீதமானவை 250,000 ரூபாய்களுக்குக் குறைவான தனிப்பட்ட வருடாந்த உற்பத்தியை உடைய சிறிய தொழில் நிலையங்களாகவும், 29 சதவீதமானவை நடுத்தர அளவுடைய தொழில் நிலையங்களாகவும் (ரூபா 250,000க்கு மேற்பட்டவைகளும், ரூபா 20 இலட்சத்திற்குக் கீழ்ப்பட்ட வைகளும்) 9 சதவீதமானவை 20 இலட்சம் ரூபாய்களுக்கு மேற்பட்ட உற்பத்தியையுடைய பெரிய தொழில் நிலையங்களாகவும், விளங்குகின்றன. மொத்த உற்பத்தியில் சிறிய தொழில் நிலையங்களின் பங்கு மிகச் சிறியதாக விளங்குகின்றபடியால், கைத்தொழில் அமைப்பில் இக்கைத்தொழில்களின்

முக்கியத்துவம், கைத்தொழில் நிலையங்களின் அளவிலுள்ள தீட்சணமான சமமற்ற நிலையுடன் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, தொழில் நிலையங்களில் 68 சதவீதமானவை மொத்த உற்பத்திப் பெறுமானத்தில் 7.5 சதவீதத்தை உற்பத்தி செய்கையில், தொழில் நிலையங்களில் 9 சதவீதமானவற்றிற்குள் உற்பத்தியில் 67 சதவீதம் செறியப்பட்டுள்ளது.

சிறிய தொழில் நிலையங்களில் அரைவாசிக்கு மேற்பட்டவை (அல்லது 56 சதவீதமானவை) மூன்று கைத்தொழில்களில் அடங்கியுள்ளன. இவை, விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களும், பல்வேறு இரசாயனப் பொருட்கள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்), ஆகியனவாகும். இக் கைத்தொழில்களிலுள்ள ஒரு முன்மாதிரியான கைத்தொழில் நிலையம் (அல்லது நடுவிலுள்ள கைத்தொழில் நிலையம்) சிறியதாக விளங்குகின்றதுடன் சிறிய கைத்தொழில் நிலையங்களின் மொத்த எண்ணிக்கையில் 75 சதவீதத்திற்கு வகையாகவும் இருக்கின்றது. விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களுமாகிய கைத்தொழிலிலும் உற்பத்திச் செறிவு உயர்ந்து விளங்குகின்றது. இத்துறையிலுள்ள இரண்டு கைத்தொழில் நிலையங்கள், இக் கைத்தொழிலின் உற்பத்தியில் 52 சதவீதத்திற்கு வகையாயிருந்தன. இத்துறையிலுள்ள இரண்டு பிரதான பொருட்களாகிய விஸ்கோத்திற்கும், இனிப்புப் பதார்த்தங்களுக்குமிடையில் ஓர் பாகுபாட்டை ஏற்படுத்தினுல் இக்கைத்தொழிலில் உள்ள செறிவின் அளவு மேலும் உயர்ந்ததாக விளங்கும். விஸ்கோத்து உற்பத்தியின் மொத்தப் பெறுமானத்தில் மிகவும் உயர்ந்த பங்கை வகிக்கும் ஓர் தனிப்பட்ட விஸ்கோத்து உற்பத்தி செய்யும் தொழில் நிலையம், அடுத்தபடியாகவுள்ள பெரிய தொழில் நிலையத்தின் உற்பத்தியிலும் பார்க்கப் பன்னிரெண்டு மடங்கிற்கதிகமாக உற்பத்தி செய்வதன் காரணமாக, கைத்தொழிலின் இப்பகுதியில், முழுமையிலும், ஒப்பியல்பிலும் முக்கியத்துவம் நிறைந்தவோர் இடத்தை வகிக்கின்றது. இத்துறையின் உற்பத்தி விநியோகத்திலுள்ள சமமற்ற தன்மை விஸ்கோத்திலும் பார்க்க இனிப்புப் பதார்த்தங்களில் குறைந்து விளங்குகின்றதெனினும், இனிப்புப் பதார்த்தங்களைப் பிரதான வகைகளின்படி பிரிக்கையில் (அவித்த இனிப்புகளும், ''ரொப்பிகளும்'', ''சொக்களற்றுகளும்'') இவ்வொவ்வொரு குறிப்பிட்ட சந்தைகளிலுமுள்ள ஒன்று அல்லது மிகச்சில தொழில் நிலையங்களின் முக்கியத்துவம் தெளிவாகின்றது.

பாதரட்சைகளினதும் தோற்பொருட்களினதும் கைத்தொழிலில் ஓர் குறிப்பிடத்தக்க உயர்ந்த உற்பத்திச் செறிவு நிலவுகின்ற பொழுதிலும் இது முன்பு குறிப்பிடப்பட்டதிலும் பார்க்கச் சிறிது வேறுபட்ட வகையானதாகும். இக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மூன்று தொழில் நிலையங்கள் உற்பத்தியில் 92 சதவீதத்திற்குக் காரணமாயிருந்துள்ளன. ஆயினும் இத்துறையில் உள்ள மிகப் பெரிய உற்பத்தியாளருக்கும் அதற்கு அடுத்ததாக விளங்குபவருக்குமிடையிலுள்ள இடைவெளி, பிந்தியவரின் உற்பத்தியிலும் பார்க்க மூன்றரை மடங்காக விளங்குகின்றது. (''விஸ்கோத்தும், இனிப்புப் பதார்த்தங்களும்'', என்ற கைத்தொழிலிலுள்ளதிலும் பார்க்க இது மிகக் குறுகியதாகும்). உதாரணமாக, உணவும், போத்தலில் அடைக்கப்பட்ட பானங்களும் தயாரிப்பவை போன்ற ஏனைய சில கைத்தொழில்களில் ஒப்பியல்பில் நிலவிவரும் உயர்ந்த ஏற்றியிறக்கலும், கையாளுதற் கூலிகளும் உள்ளூர்களிலுள்ள சந்தைகளுக்கு இப்பொருட்களை வழங்கும் சிறிய தொழில் நிலையங்களை உயிர் பிழைத்திருப்பதற்கு அனுமதிக்கின்றன. ஆனல் பாத

ரட்சைக் கைத்தொழில் இவை போலல்லாமல், பாதரட்சைக் கைத்தொழில் உற்பத்தியிலும், விற்பனையிலும் பெருமளவுத்திட்ட நயங்களைத் தன்வசம் வைத்திருப்பதுடன், நிதி வலிமையையும், நுகர்வோரின் விருப்பு வெறுப்பு களைத் திருப்தி செய்யும் புதிய வடிவ அமைப்புள்ள பொருட்களைப் புகுத்தும் ஓர் ஆற்றலையும் பக்கபலமாகக் கொண்டுள்ளது.

வேறு இரு கைத்தொழில்களிலும் சிறிய தொழில் நிலையங்களின் முக்கியத்துவம் பொருந்திய நிலை ஓர் அம்சமாக விளங்குகின்றது. அவை யாவன, பழுதடையாமலும், கலனிட்டு வைக்கப்பட்டதுமான பழங்களும், மரக்கறிகளும்; வாயுப்பானங்களும் ஆகும். முந்தியதில், உற்பத்தியின் மொத்தப் பெறுமானத்தில் 65 சதவீதமளவு உற்பத்தி செய்கின்ற ஒரு தனிப்பட்ட அரசாங்கத் தாபனம், சேர்க்கப்பட்டுள்ளது. எனினும், இக் கைத்தொழிலின் தனிப்பட்டோர் துறையிலுள்ள உற்பத்தியின் விநியோகம், ஒப்பியல்பில் ஓர் உயர்ந்த அளவு சமதன்மையைக் காட்டுகின்றது. மறு பக்கத்தில் வாயுப்பானங்களைத் தயாரிக்கும் தொழில் நிலையங்களின் அளவு விநியோகம் பொதுப்படையான கைத்தொழிலின் போக்குடன் ஒத்துவருகின் றது. ஒரு தனிப்பட்ட பிரமாண்டமான தொழில் நிலையம், தனது நெருங்கிய எதிரியின் உற்பத்தியிலும் பார்க்க மூன்றரை மடங்குகளை உற்பத்தி செய் வதன் காரணமாக தொழில் நிலையங்களில் ஓர் மிகவும் உயர்ந்த விகிதசமம் தாழ்த்தப்பட்டுள்ளது. எனினும், தொழில் நிலையங்கள் சிறியனவாக உள்ள தன்மையினால் இக்கைத்தொழிலில் வழமையாக எழும் நயமற்ற தன்மை களை, உள்ளூர்ச் சந்தைகள் அளிக்கும் விற்பனையும், ஏற்றியிறக்கற் சிக்கனங் களும் அரைகுறையாக ஈடுசெய்கின்றன.

நியாயமான அளவு சிறிய தொழில் நிலையங்கள் ஆடைக்கைத்தொழிலில் இருக்கின்ற பொழுதிலும், இக்கைத்தொழிலின் பிரதம உற்பத்திப் பொருட் களாகிய சேட்டுகள், பெனியன்கள், குடைகள் ஆகியவற்றைத் தனித்தனியே நோக்கும் பொழுது, உற்பத்தி நியதியின்படி ஓர் உயர்ந்த செறிவு இக்கைத் தொழிலில் நிலவுகின்றதென்பது தெளிவாகின்றது. (இவை இக்கைத்தொழி லின் உற்பத்தியில் 90 சதவீதத்திற்கு வகையாயிருக்கின்றன). பெனியன்கள் உற்பத்தி பெருமளவில் ஒரு தனித் தொழில் நிலையத்தையே சாருகின்றது. அதேபோல, கிட்டத்தட்ட குடைகளின் முழு உற்பத்தியும், இன்னொரு தொழில் நிலையத்தைச் சாருகின்றது. சேட்டுகளின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள மொத்தம் 20 தொழில் நிலையங்களில் 4 நிலையங்கள், உற்பத்தியில் 73 சத வீதத்தைப் பகிர்கின்றன. ஆனால் இவற்றில் 2 தொழில் நிலையங்கள் உற் பத்தியில் 50 சதவீதத்திற்கு வகைகூறுகின்றன.

இங்கு எடுத்துக்கொள்ளப்பட்ட எஞ்சிய கைத்தொழில்களில் (அர சாங்கக் கூட்டுத்தாபனங்கள் முழு உற்பத்தியாளராக உள்ள தொழில் நிலையங்கள் நீங்கலாக) ''பியரும், ஸ்ரவுட்டும்'' என்ற கைத்தொழில் மட்டுமே, 1963ம் ஆண்டில் ஒரு தனிப்பட்ட தொழில் நிலையமாக விளங்கியது.

கூலிச்செலவின் அளவுப்படி தொழில் நிலையங்களைப் பாகுபடுத்தும் அட்டவணை V, உற்பத்தித் தொழில் நிலையங்களின் அளவிலுள்ள சமமற்ற தன்மையை வெளியாக்குகின்றது. இது, அத்தொழில் நிலையங்களின் உற் பத்தி[1] பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டுள்ள துடன் ஒப்பியல்பாகின்றது. அட்டவணை Vல் சேர்க்கப்பட்டுள்ள கைத்

1. இவ் அட்டவணையில் உபயோகிக்கப்பட்டுள்ள தொழில் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை, உற்பத்தியின்படியான தொழில் நிலையங்களின் விநியோகத்தைக் காட்டும் அட்டவணை IVல் உள்ளதிலும் பார்க்கக் குறைந்து விளங்குகின்றது. (புகையிலைக் கைத்தொழில் விலக்கப் பட்டுள்ளது). இக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பீடி தயாரிக்கும் தொழில் நிலையங்கள் அத்தனையும் ஒப்பந்தத்தின் பேரில் வேலை கொடுப்பதன் காரணமாக, இவற்றின் தனியான கூலியினதும் வேலை நிலையினதும் எண்களை மதிப்பிடுதல் மிகவும் கடினமானதாகும்.

தொழில்களுக்கான மொத்தக் கைத்தொழிற் கூலிகளில் 61.1 சதவீதமான தொகை, 4.3 சதவீதமான தொழில் நிலையங்களாலும் (ஒரு வருடத்தில் 500,000 ரூபாய்களுக்கு மேற்பட்ட தனியான கூலிச்செலவை உடையவை), கூலிச்செலவில் 5.3 சதவீதமான தொகை, 48 சதவீதமான தொழில் நிலையங்களாலும் (15,000 ரூபாய்களுக்குக் கீழ்ப்பட்ட தனியான கூலிச் செலவுடையவை) பொறுக்கப்பட்டன.

இரண்டு மிகக் குறைந்த தொகுதிகளையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்பொழுது 80 சதவீதமான தொழில் நிலையங்கள் கூலிச்செலவில் 17.3 சதவீதமான தொகைக்கு மட்டுமே காரணமாயிருக்கின்றன என்பது தெளிவாகின்றது. மறுபக்கத்தில் மிகக்கூடிய கூலிச்செலவுத் தொகுதியை மேலும் பாகுபடுத்தினுல், 11 தொழில் நிலையங்கள் (அல்லது அட்டவணையில் தரப்பட்டுள்ளவற்றில் 3 சதவீதமானவை) கூலிச்செலவில் 162 இலட்சம் ரூபாய்களுக்கு அல்லது மொத்தக் கைத்தொழிற் கூலிகளில் 55 சதவீதமான தொகைக்கு வகையாக இருப்பது காணக்கூடியதாக இருக்கின்றது. இத்தொகையில் 106 இலட்சம் ரூபாய்கள், அல்லது மூன்றில் இரண்டு பங்கிற்கு சிறிது குறைவான தொகை, தனிப்பட்டோரினது கைத்தொழிற் துறையைச் சார்ந்ததாகும்.

உற்பத்தியின் அளவுப்படி பகுக்கப்பட்டுள்ள தொழில் நிலையங்களில் உள்ளது போலவே, கூலிச்செலவு நியதியின்படியான பகுப்பிலுள்ள மிகச் சிறிய தொழில் நிலையங்களில் பெரும்பகுதியும், மூன்று கைத்தொழில்களில் அடங்கியுள்ளது. அவை, விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களும், பல்வேறு இரசாயனப் பொருட்கள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) ஆகியனவாகும். ஒரு வருடத்தில் 15,000 ரூபாய்களுக்குக் கீழ்ப்பட்ட தனியான கூலிச்செலவையுடைய சகல தொழில் நிலையங்களினதும் எண்ணிக்கையில் 60 சதவீதமான தொகைக்கு இக்கைத்தொழில்கள் வகையாயிருந்தன. தொழில் நிலையங்களின் அளவில் ஏற்படுகின்ற சமமற்ற தன்மை, ''தயாரிக்கப்பட்ட பொருட்கள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்)'' என்ற துறையில் ஒப்பியல்பிற் சிறிதாக விளங்குவதற்கு, இத்துறையில் 500,000 ரூபாய்களுக்கு மேற்பட்ட கூலிச்செலவுடைய தொழில் நிலையம் ஒன்று கூட இல்லாததே காரணமாகும். ஆயினும், ஒரு மிகப்பெரிய தொழில் நிலையத்திற்கருகே சிறிய தொழில் நிலையங்கள் செறிந்து (பாரதூரமான சமமற்ற தன்மைகளுக்கு வகையாக) காணப்படுவது, ''விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களும்'', அத்துடன் ''பல்வேறு இரசாயனப் பொருட்களும்'' என்ற கைத்தொழில்களிலோர் அம்சமாக விளங்குகின்றது. ''காகிதப் பொருட்களும், காகித மட்டைப் பொருட்களும்'' என்ற கைத்தொழிலிலும் அதேவிதமான அமைப்பு விளங்குகின்றது. இக்கைத்தொழிலிலுள்ள தொழில் நிலையங்களினது அளவுத் தரங்கள் ஒப்பியல்பில் அமையத்தகாதவையாயினும், காகித உற்பதியில் ஈடுபட்டிருக்கும் ஒரு தனியான பெரிய தொழில் நிலையத்தின் (கிழக்குப் பகுதிக் காகிதக் கூட்டுத்தாபனம்) உற்பத்திகள், இக்கைத்தொழிலின் எஞ்சிய பகுயினுல் உற்பத்தி செய்யப்படும் முக்கிய பொருட்களாகிய காகிதச் சுற்றுறைப் பெட்டிகள், சுற்றுறைப் பெட்டிகள் அல்லது பயிற்சிப் புத்தகங்கள் ஆகியவற்றுடன் நுணுக்கமாக ஒப்பிடத்தக் தகுந்தவைகளல்ல.

தொழில் நிலையங்கள் மிக அதிகமாகவுள்ள கைத்தொழில்களில் ஒன்ருன ஆடைகள் என்ற கைத்தொழிலில், 70 சதவீதமளவு கைத்தொழில் நிலையங்கள் அட்டவணைகளில் தரப்பட்டுள்ள பகுப்பின்படியுள்ள நடுத்தரத் தொகுதிகளைச் சார்ந்த கூலிச்செலவுகளை உடையனவாய் விளங்குகின்றதன்

காரணமாக, இவற்றின் அளவிலோர் சிறிய பாகையான சமமற்ற தன்மை காணப்படுகின்றது. எனினும் உற்பத்திப் பெறுமானத்தின்படியான தொழில் நிலையங்களின் பகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இக்கைத்தொழிலில் அமைந்துள்ள ஒவ்வொரு தனித்தனியான பொருட்களினதும் செறிவுத் தன்மை, இக்கைத்தொழிலிலுள்ள சகல தொழில் நிலையங்களினதும் கூலிச் செலவின்படியான பாகுபாட்டின் அமைப்பு தெளிவாக்குகின்ற செறிவுத் தன்மையிலும் பார்க்க மிகக் கூடியதாக விளங்குகின்றது. விஸ்கோத்தும் இனிப்புப்பதார்த்தங்களும் என்ற கைத்தொழிலைப்போல, தொழிலில் அமர்த் தப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை பெரிதாய் விளங்குவது, (இவ் அட்ட வணைகளில் உபயோகிக்கப்பட்டுள்ள கைத்தொழிற் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் 17 சதவீதமளவாகும்) ஆடைகள் என்ற கைத் தொழிலிலும் ஓர் சிறந்த அம்சமாக விளங்குகின்றது. கூலிச்செலவு நியதியின் படி இக்கைத்தொழிலில் உள்ள சராசரியான தொழில் நிலையத்தின் அளவு (நடுவிலுள்ள தொழில் நிலையத்தினுல் விளக்கப்படுகின்றது) முழுக் கைத் தொழிற் துறைக்கான சராசரியான தொழில் நிலையத்தின் அளவிலும் பார்க்கப் பெரிதாக விளங்குகின்றது. ஒப்பியல்பில் இக்கைத்தொழிலில் வழங் கப்படும் தாழ்ந்த கூலி விகிதங்களின் காரணமாக, (அட்டவணை Iஐப் பார்க்கவும்) இக்கைத்தொழிலிலுள்ள சராசரித் தொழில் நிலையத்தின் அளவு, தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மேலும் பெரிதாக விளங்குகின்றது.

ஒவ்வொரு கைத்தொழிலிலும் உள்ள மிகப்பெரிய தொழில் நிலையங் களுக்கான அவற்றின் உற்பத்திப் பெறுமானத்தின் பங்கை, ஒப்பியல்பாகின்ற கூலிச்செலவின் பங்குடன் ஒப்பிடுகையில், பொதுவாகப் பெரிய தொழில் நிலையங்கள் தங்களது கைத்தொழில்களின் கூலிச்செலவின் பங்கிலும் பார்க்க உற்பத்தியிற் கணிசமானவோர் உயர்ந்த பங்கிற்கு வகையாயிருக்கின்றன என்பது தெளிவாகின்றது. சிறிய தொழில் நிலையங்கள் இதற்கு எதிர்மாறுன விளைவுகளைக் காட்டுகின்றன. பெரிய தொழில் நிலையங்கள் கூலிச்செலவிலும் பார்க்க உற்பத்தியில் உயர்ந்த பங்கை வகிக்கும் தன்மை ''பழுதடையா மலும், கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்களும், மரக்கறிகளும்'', ''பல்வேறு இரசாயனப் பொருட்கள்'', ''உலோகப் பொருட்கள்'', ''பாத ரட்சைகளும் தோற்பொருட்களும்'' ஆகிய கைத்தொழில்களில் மிகவும் குறிப்பிடும்படியாகக் காணப்படுகின்றது. பழங்களும் மரக்கறிகளும் பழுதடை யாமல் பாதுகாப்பதிலும், கலனிடுதலிலும் ஈடுபட்டுள்ள தொழில் நிலையங் களில் மிகப் பெரிய நிலையம், இக்கைத்தொழிலின் மொத்த உற்பத்திப் பெறுமானத்தில் 65 சதவீதத்தை உற்பத்தி செய்ததெனினும், இதன் கூலிச்செலவு இக்கைத்தொழிலின் மொத்தக் கூலிச்செலவில் 42 சதவீதமே யாகும். பல்வேறு இரசாயனப் பொருட்கள் என்ற கைத்தொழிலில் உள்ள மிகப் பெரிய தொழில் நிலையம், இக்கைத்தொழிலின் மொத்த உற்பத்திப் பெறுமானத்தில் 58 சதவீதத்திற்கும், மொத்தக் கூலிச்செலவில் 42 சத வீதத்திற்கும் வகையாயிருந்தது. உலோகப்பொருட்கள் என்ற கைத்தொழிலி லுள்ள மூன்று மிகப் பெரிய தொழில் நிலையங்கள், இக்கைத்தொழிலின் மொத்த உற்பத்திப் பெறுமானத்தில் 44 சதவீதத்திற்கும் மொத்தக் கூலிச் செலவில் 24 சதவீதத்திற்கும் வகையாயிருந்தன. கடைசியாக, பாதரட்சை களும், தோற்பொருட்களும் என்ற கைத்தொழிலில் ஒரு தனிப்பட்ட தொழில் நிலையம், இக்கைத்தொழிலின் மொத்த உற்பத்திப் பெறுமானத்தில் 63 சத வீதத்தை உற்பத்தி செய்கின்றதெனினும், இதன் கூலிச் செலவு இக்கைத் தொழிலின் மொத்தக் கூலிச்செலவில் 55 சதவீதம் மட்டுமேயாகும்.

இத்தொழில் நிலையங்களுக்கான கூலிக் கொடுப்பனவுக்ளுக்கும், உற்பத்திப் பெறுமானத்திற்குமிடையேயுள்ள தாழ்ந்த விகிதாச்சாரம், ஒரு பெரிய தொழில் நிலையம் நிறுவக ரீதியில் மிகவும் திறமையுள்ளது என்பதையும், அல்லது அதன் உற்பத்தி முறைகள் கூடுதலாகப் பொறி முறைப் படுத்தப்பட்டுள்ளன என்பதையும் (இதன் பயனுகத் தொழிலாளி யின் உற்பத்தி அதிகரிக்கின்றது) காட்டுகின்றது. அப்படி இருக்கக்கூடு மென்பதில் விளங்கும் மேற்கோள் யாதெனில் உற்பத்திப் பெறுமானத்தில் மூலப்பொருட்களின் பங்கில், அல்லது கூலி விகிதங்களில் தொழில் நிலையங் களுக்கிடையே குறிப்பிடும்படியான வேறுபாடுகள் அற்றிருப்பதே. இம் மேற்கோள்களில் முதலாவது குறிப்பிடப்பட்டதிலும் பார்க்க, இரண்டா வதாகக் குறிப்பிடப்பட்டது சில கைத்தொழில்களுக்கு ஒவ்வாது. இவ்விரண் டாவது மேற்கோள் ஆடைகள் என்ற கைத்தொழிலில் விதிவிலக்காக அமை கின்றதென்பது, இக்கைத்தொழிலினேர் படிப்பிலிருந்து தெளிவாகின்றது. இக்கைத்தொழிலிலுள்ள சிறிய தொழில் நிலையங்களுக்கும் பெரிய தொழில் நிலையங்களுக்குமிடையே உற்பத்தியினது மூலதனச் செறிவில் ஏற்படும் வேறு பாடுகள் சிறியவைகளாய் விளங்குவது, இவ்விதிவிலக்கிற்கு ஒரு காரண மாயிருக்கக்கூடும். இதற்கான கூடிய சான்றுகளை அளிக்குமோர் இரண்டாவது காரணம் யாதெனில், அது, சிறிய தொழில் நிலையங்கள் கணிசமான அளவு வேலைகளை ஒப்பந்தத்தின் பேரிற் கொடுக்கின்றபடியால், கூலிகளின் நியதிப் படி நோக்குகையில் இவ்வேலைகளுக்குரிய கொடுப்பனவு விகிதங்கள், பெரிய தொழில் நிலையங்களிலுள்ள ஒழுங்கான தொழிற்சாலை ஊழியர்களின் கூலி விகிதங்களிலும் பார்க்க மிகக் குறைவாக விளங்குகின்றமையேயாகும். ஒப்பியல்பில் சிறு தொகையுள்ள நிரந்தரமான ஊழியர்களை அல்லது முழு நேர ஊழியர்களைக் கொண்டுள்ள, ஆடைகள் தயாரிக்கும் சிறிய தொழில் நிலையங்களில் விளங்கும் இவ்விதமானவோர் வேலை நிலையமைப்பு, மேலதிகச் செலவுகளை மிகக் குறைந்த மட்டத்திற்குக் குறைப்பதோடு, விசேடமாக வருடம் முழுவதும் கிரமமானவோர் உற்பத்தி மட்டத்தை நிலைநாட்ட முடியாத தொழில் நிலையங்களின் கூலிக் கொடுப்பனவுகளில் ஓர் சேமிப்பை யும் உண்டாக்குகின்றது.

கூலிவிகிதங்களின் இவ்வமைப்பிற்கு ஓர் தொடர்ச்சியென சில கைத் தொழில்களில் (பிரதானமாக ரயர்களுக்குக் கோடமைக்கும் கைத்தொழிலில்) அவதானிக்கப்பட்டுள்ளது யாதெனில், அது, ஆள் வேலைநாளுக்கான கூலி, சிறிதானதும் குறைவாகப் பொறி முறைப்படுத்தப்பட்டதுமான தொழில் நிலையங்களிலும் பார்க்கப் பெரிதானதும், கூடுதலாகப் பொறிமுறைப்படுத் தப்பட்டதுமான தொழில் நிலையங்களில் தாழ்ந்ததாக விளங்குவதேயாகும். தற்காலப் பொறிமுறைகள் தொழிற் திறமைகளுக்கும், உடலை வருத்தும் வேலைகளுக்குமோர் பதிலீடாக அமைகின்றபடியால், குறைவான பொறி முறைகளை அல்லது பழமையான சாதனங்களைக் கொண்ட சிறிய தொழில் நிலையங்கள், உயர்ந்த கூலிவிகிதங்களில் கூடிய உடற்பாவனையையும், உடலு ழைப்புத் திறமைகளையும் படைத்த தொழிலாளர்களை வேலைக்கமர்த்து கின்றன. (எனினும் கூலி விகிதங்களில் சிறிய தொழில் நிலையங்களுக்கும் பெரிய தொழில் நிலையங்களுக்குமிடையே இருக்கும் இவ்வித வேறுபாடுகள், அதிகமான பெரிய தொழில் நிலையங்களால் அளிக்கப்படுகின்ற ஓர நன்மை களாலும், ஏனைய பொதுநல வாய்ப்புகளாலும் ஓரளவுக்கு ஈடுசெய்யப்படு கின்றன. இவ்விதமான கொடுப்பனவுகளின் பெறுமானம், அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள கூலிச்செலவிற் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது).

## பின்னிணைப்பு

### புள்ளிவிபர மூலங்களின் மீதான குறிப்பு

இப்பகுதியிலே அடங்கியிருக்கும் கைத்தொழிலின் போக்குகள் பற்றிய விபரம், 1960ம் ஆண்டு தொடக்கம் 1963ம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியில் தனிப்பட்ட உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்களின் உற்பத்தி எண் தொகைகளையும், வேலைநிலை எண் தொகைகளையும், அடிப்படையாகக் கொண்டுள்ளது. அரசாங்க ஆதிக்கமுள்ள கைத்தொழிற் கூட்டுத்தாபனங் களும் உட்படும்படியாக 1963ம் ஆண்டுக்கான தொழில் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை, பதியப்பட்ட தரவுகளின்படி 433 ஆகும். (கடந்த வருடங்களிற் பதியப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை குறைவான தாகும்). இத்தொழில் நிலையங்கள் 18 கைத்தொழில்களுக்குரியனவாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. ''பல்வேறு உணவுத் தயாரிப்புகள்'' என்பதற்குக் கீழ்க் காட்டப்பட்டிருக்கும் உட்கொள்ளத்தக்க எண்ணெய்களும் கொழுப் புக்களும் (பிரதானமாகத் தேங்காயெண்ணெய்யும், தேங்காய்த் துருவலும்) நீங்கலாக, இங்கு விபரிக்கப்பட்டுள்ள கைத்தொழில்கள், தற்போதைய கைத் தொழில் அபிவிருத்தியின் குணவியல்பாகத் தயாரிப்புத் தொழிலில் ஏற் பட்டுள்ள புதிய துறைகளைப் பிரதிபலிக்கின்றன.

ஊழியர் சேமநிதி அதிகாரச்சட்டத்தின் கீழ்வரும் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரையில், தொழில் நிலைபற்றிய தரவுகள் (முக்கியமாகத் தொழிலாளர்களின் சராசரி எண்ணிக்கை, வேலை செய்யப்பட்ட மொத்த ஆள்வேலை நாட்கள், கூலிச் சம்பளச் செலவுகள் முதலியவற்றை அடக்குப வை), ஊழியர் சேமநிதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விவரமான புள்ளி விபரங் களிலிருந்து பெறப்பட்டனவாகும். ஏனைய தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட தரவுகள், அத்தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழில் நிலையங்களுக்கு மகாவங்கி அனுப்பிய வினாப்பத்திரம் வாயிலாகப் பெறப்பட்டன. ஊழியர் சேமநிதியின் கீழ் அல்லாத வேலைநிலைகள் (தனிப்பட்ட சேமநிதிகள் உள்ள தொழிலாளர்களைவிட) மூன்று தொழிலாளர்களுக்குக் குறைவான எண்ணிக் கையுள்ள தொழிலாளர்களையுடைய தொழில் நிலையங்களையும், அத்துடன் அமயத் தொழிலையும், ஒப்பந்தத்தின் பேரில் கொடுக்கப்படுகின்ற வேலை யையும் குறிக்கின்றபடியால், ஊழியர் சேமநிதித் தரவுகள், கைத் தொழிற் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் ஓர் உயர்ந்த விகிதசமத் தைப் பிரதிபலிக்கையில், பல சிறு தொழில் நிலையங்களை விலக்கிவிடுகின்றன. ஒப்பந்தத்தின் பேரில் வேலைகொடுக்கும் தொழில் நிலையங்களினதும் (முக்கிய மாக ஆடைகள் என்ற கைத்தொழிலில் உள்ளவற்றினதும், பீடி தயாரிக்கும் கைத்தொழிலில் உள்ளவற்றினதும்), அத்துடன் குறிப்பிட்டவேறு சில தொழில் நிலையங்களினதும் வேலை நிலை பற்றிய எண்தொகைகள் (வேலையில் உள்ளவர்களின் எண்ணிக்கை, வேலை செய்யப்பட்ட ஆள்வேலை நாட்கள் போன்ற அடிப்படைகளின்படியானவை), அந்தந்தத் தொழில் நிலையங்களி லிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து கணிக்கப்பட்டன. ஊழியர் சேமநிதிப் புள்ளிவிபரங்கள், ஒரு வர்த்தகத் தாபனத்தின் தயாரிப்புத் துறையை, அதன் வெறும் வியாபார அல்லது ஏனைய தொழிற்பாடுகளிலிருந்து வேறுபடுத்துவதில்லை. ஆகையினால், இம்மூலத்திலிருந்து பெறப்பட்ட சில தொழில் நிலையங்களுக்கான தரவுகள், வேலைநிலையைத் தற்போ தைய படிப்பில் உட்படுத்தப்பட்டிருக்கும் தயாரிக்கப்பட்ட பொருட்களின் பாகுபாட்டிற்குச் சம்பந்தப்படுத்திச் சீராக்கப்பட்டிருக்கின்றன.

பிரதான தயாரிப்புப் பொருட்களினது உற்பத்திப் பெறுமானத்தைக் காட்டுகின்ற உற்பத்தி பற்றிய தரவுகளில் பெரும்பகுதியானவையும், நேரடியாகத் தொழில் நிலையங்களிலிருந்து பெறப்பட்டனவாகும். எஞ்சி

யவை, வர்த்தகக் கைத்தொழில் அமைச்சிடமிருந்து பெறப்பட்டன. உற்பத்திப் பெறுமானங்கள், தொழிற்சாலையின் உற்பத்தி விலை (இது இயல்பான இலாபங்களும் உட்பட்ட சிலவருமானங்களைப் பிரதிபலிக்கின்றது) எனக் கருதப்படுகின்றன. ஆனால் ஒரு பொருளுக்கு மேற்பட்ட பொருட்கள் தயாரிக்கும் தொழில் நிலையங்கள் சம்பந்தப்பட்டவரையில், செலவுக் கணக்கு முறைக் கஷ்டங்களும், பொருட்களுக்கிடையே செலவைப் பகிர்ந்தளிக்கும் கஷ்டங்களும், இத்தொழில் நிலையங்களிற் பெரும்பாலானவற்றிற்கு, விற்பனைப் பெறுமானங்களைக் கொடுக்கும்படியாகத் தூண்டின. கடைசியாகக் கூறப்பட்ட பெறுமானங்களின் எண்தொகைகள் கணிசமான அளவு நிச்சயத்துடன் அவற்றின் உற்பத்திப் பெறுமானங்களைப் பிரதி பலிக்கத்தக்கதாக அளவிட்டு இறக்கப்படுதல், சில சந்தர்ப்பங்களில் மட்டுமே முடியும். பொதுவாகத் தொழில் நிலையங்களால் அளிக்கப்பட்ட எண்தொகைகள் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதன் விளைவாக, கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப் பெறுமானம் ஓரளவு மிகை மதிப்பீடாகக் காணப்படக்கூடும்.

தொழில் நிலையங்களிலிருந்து மகாவங்கி நேரடியாகப் பெறப்பட்ட தகவல்கள், ஒரு விரிவான பட்டியலிற் காணப்படும் உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்களுக்கு அது விலாசமிட்டு அஞ்சல் மூலம் அனுப்பிய ஓர் வினாப்பத்திரத்தின் பயனாகக் கிடைத்தன. இப்பட்டியலில் ஒரு பகுதி வர்த்தக கைத்தொழில் அமைச்சின் ஏடுகளிலிருந்தும், மறுபகுதி 1963ம் ஆண்டில் இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ''உண்மை உபயோகிப்பாளர்'' இறக்குமதி உத்தரவுச்சீட்டுகளினது ஏடுகளிலிருந்தும், தொகுக்கப்பட்டன. கொழும்பிலும் அதன் சுற்று வட்டாரங்களிலுமுள்ள தொழில் நிலையங்களின் சந்தர்ப்பத்தில் அஞ்சல் வினாப்பத்திரத்திற்கு, நுண்ணாய்வு உத்தியோகத்தர்களின் பார்வையிடுதல் துணையாக அமைந்தது. வினாப்பத்திரத்திற்குப் பதிலளிக்காத தொழில் நிலையங்களும், வெளிப்படையாக நம்பத்தகாததும் இசைவில்லாததுமான புள்ளிவிபரங்களை (இப்புள்ளி விபரங்களை அறவே விலக்கிவிட வேண்டி நேர்ந்தது) அளித்த தொழில் நிலையங்களும் தனித்தனியாகவோ அல்லது ஒன்று சேர்த்து மொத்தமாகவோ அவ்வளவு முக்கியமானவையல்ல என நம்பப்படுகின்றது. அளவீட்டிலிருந்து அவற்றை விலக்கியிருப்பது, முழுமையான முடிவுகளின் மதிப்பிற்குக் கெடுதலளிக்கத்தக்கதல்ல. இந்த முடிவுகள், இப் படிப்பில் உட்படுத்தப்பட்டிருக்கும் வேறுபட்ட கைத்தொழில்களில் உள்ள கைத்தொழில் உற்பத்தியினதும், வேலை நிலையினதும் அளவைத் தீர்மானிப்பதற்குப் போதுமானவையாகக் காணப்படுகின்றன. இவை அத்துடன், வளர்ச்சியுறுகின்ற கைத்தொழில் அமைப்பும், 1959ம் ஆண்டிலிருந்து கைத்தொழிலிற் காணப்படும் வருடாந்த வளர்ச்சி வீதங்களுமாகிய இரண்டினைப் பற்றியும் ஓரளவு தீர்க்கமான காட்டியைத் தருகின்றன.